# வெளிச்சம்

புரட்டாதி - ஐப்பசி - 1991



12-1991

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

உங்கள் அனைத்து தேவைகளையும்
நிறைவேற்றும் நிறுவனம்


# தமிழருவி

கஸ்தூரியார் வீதி,

உங்கள் புகைப்படம்
தொடர்பான
அனைத்துத் தேவைகளுக்கும்,
வேலைகளுக்கும்,
தொடர்புகொள்ளுங்கள்.

# அருச்சுனா

அருச்சுனா வீதி,
(ஸ்ரான்லி வீதி)
யாழ்ப்பாணம்.



''பாதை நெடியது.
பயணம் கொடியது.
என்றாலும் இவர்கள் இலக்கு;
தவறாது
தூரம் கொஞ்சம் அதிகம்தான்,
ஆனாலும் கைகளிற் கிட்டாத
தொடுவானமல்ல.
தோள்களிற் கிடப்பது சுமையல்ல
வெளிச்சம் தரும் கருவி.
பாதை பிசகாது,
சூரியத் தலைவன் வழிகாட்டி.
இடையில் இருள் வந்தாலும்...
தளர்ச்சியில்லை.
கைகளில் வெளிச்சம் இருக்கிறது''

12-1991

எங்கள் நிலத்துக்கு எருத்தேவை
ஏனென்றால் இங்கே
எருக்கலை, ஈஞ்சு, குருவிச்சை
எங்கும் பரவி
இருப்பிருந்த சத்தையெல்லாம்
தங்களது பாட்டில் சவட்டிக் குடித்தமையால்
எங்கள் நிலத்துக் கெருத்தேவை'
என்றபடி காளைகளை விரட்டி
வண்டிலை விட்டபடி
காளை ஒருவன் கதைத்தபடியே செல்வான்.
வீரன் ஒருத்தனே மாவீரன் ஆனான்
காளைகளை முன்விட்டுக்
கயிற்றைப் பிடித்துத்


கல்வயல்
வே. குமாரசாமி


# இன்றைய எங்கள் வீதி
# ஒவ்வொன்றும்
# அல்லது
# புதிய புலிக்குட்டி



தன் தோளில் கலப்பை நுகத்தைச்
சுமந்தபடி
''நாளையுங்கூட உழுதுழுது வைச்சாத்தான்.
வேளை வரும்போது விளைச்சல் கிடைக்கும்''
எனக் காளை நடப்பான்!
தன் மண்ணையே காதலித்து
வேளை தவறாமல்:
வேர்த்துழைப்போன் வேகமுடன்.
தோளிலே துப்பாக்கி தொங்கச்
சிலர் விரைவர்
வானில்
விமானம் ஹெலி இரையும்

பேரிரைச்சல்
பதுங்கு குழிகள் மனிதரை
அங்கே வதவதென விழுங்க.
வாய் திறந்தவாறு
செண்பகம் ஒன்று குறுக்கே நடக்கும்
வீரன் ஒருத்தனே
மாவீரன் ஆனான்?
தென்னங்குருத்துத் தெருவெல்லாம்
தோரணமாய்,
பின்னல் முறையால் பிரிவின்
பொருள் உணர்த்திச் சொல்லும் சில சேதி
துக்கம் அதனாலே
கல்லுக்குள் ஈரம் போல் மெல்லக் கசியும்
ஒரு சின்னப் பெடியன்,
மழலை மொழி - கொன்னை அவன்
"தம்பியின் காலத்தில் தான்
தமிழ் ஈழம் கிடைக்கும்
நம்புங்கள் நம்புங்கள்" என்று
உரக்கப்பாடி,
தன்னுள் ரசித்துத் தலையாட்டி,
தாளமிட்டு
கூச்சமில்லாமல்
வலு 'கூலா' கப் போவான்.
முச்சிரைக்கும் முத்த திரை விழுந்த
ஆச்சியோ
"படிடா ஒருக்கால் அதை திருப்பி மோனை"
என்றோர் வேண்டுகோளை விட்டபடி
வேலியிடை நிற்பாள்:
இடுப்பைப் பிடித்திருந்த
கையை எடுத்துப்
பொடிப்பிள்ளை கிட்டப் போய்
-பொக்கை வாய்
உச்சி தடவி உவந்து.

□□

# வெளிச்சம்

கலை, இலக்கிய, சமூக இதழ்.

இதழ் அமைப்பு,

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

ஓவியம்,

''தயா''

உருவாக்கம்,

''ஆசிரியர் குழு''

அச்சு,

ம. மரியதாஸ்

வெளியீடு,

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்


**கலை, இலக்கியப் படைப்பாளிகளே,**
**கலைஞர்களே,**

இந்த மண்ணிலே பிறந்தோம்...
தாயும் தாயகமும் எங்களுக்கு சரிநிகர்
இன்னல்களுக்கு மத்தியிலும்...
இன்னும் இருக்கின்றோம்...
பெருமை கொள்ளுவோம்.
இந்த மண்ணை,
உண்மையான அன்புடன் நேசித்து,
மண்ணுக்காக வாழ்ந்துகொண்டிருக்கும்
உங்களின் படைப்புகளுக்காக,
வெளிச்சம் காத்திருக்கின்றது.

''வெளிச்சம்''
விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம்
தலைமைச் செயலகம்,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.



இன்றே சேர்வீர் இலங்கைப் படையில்!
ஒன்றோ இரண்டோ ஒசிகள் ஆயிரம்!
தமிழர் கூரைத் தகடுகள் திருட,
சமையற் பாத்திரம் சட்டிகள் அள்ள
மின்வயர் ஆளிகள் விசிறிகள் திருட,
பொன்னகை, வானொலி, பூட்டுடைத் தள்ள

இன்றே சேர்வீர் இலங்கைப் படையில்!
ஒன்றோ இரண்டோ ஒசிகள் ஆயிரம்!

தங்கையைத் தாரமாய்த் தழுவுஞ் சுகத்தை
அங்கும் பெண்கள் அகப்படின் காணலாம்!
கொள்ளைப் பொருள்கள் கொண்டூர் செல்ல
வள்ளங் கப்பல் வழங்கிடும் அரசே!

இன்றே சேர்வீர் இலங்கைப் படையில்!
ஒன்றோ இரண்டோ ஒசிகள் ஆயிரம்!



'குரும்பர்' 'வடை'யெனக் கூவும் பயிற்சி
இருந்தாற் போதும்! இதுவே தகைமை!
குஞ்சத் தொப்பிக் கும்பலும் சேரலாம்!
அஞ்சிக் கொழும்புறை அதுகளுஞ் சேரலாம்!
இறைச்சிமீன் கசிப்பும் இலவசம் தினம்தினம்!
அறுக்கலாம் தாலிகள் ஆயிரம் ஆயிரம்!
மொத்தச் சம்பளம் முறையாய்க் கணக்கிடின்
பத்தா யிரம்வரும்! பறந்துவா படைக்கு!
சவச்சடங் குனக்குத் தமிழனே செய்வான்!
சவச்செல வுந்தாய் தந்தைக்கே ஈவோம்!

இன்றே சேர்வீர் இலங்கைப் படையில்
ஒன்றா இரண்டா ஒசிகள் ஆயிரம்!

காலைக் கையை இழக்கினுங் கடவுள்
வாலையுஞ் சேர்த்து வழங்குவார் அடுத்துநீ
எடுக்கும் பிறப்பில்! எத்தனை லாபங்கள்!
கொடுப்போம் நட்ட ஈடும் செத்தால்!
வழுக்கை விழுந்தால் மதகுரு வாகும்
வழக்கப் படிநீ பிக்குவும் ஆகலாம்!

இன்றே சேர்வீர் இலங்கைப் படையில்
ஒன்றா இரண்டா ஒசிகள் ஆயிரம்!


## வெளிவரத்தவறிய மெய்ம்மை விளம்பரம்!

ச. வே. பஞ்சாட்சரம்

# "காலங்கள்"

சாந்தன்

## 1



*1963*

இருந்தாற்போலக் குளிர்காற்று முகத்திலடித்தது. ஒரு வெளியில் நுழைந்திருந்தார்கள். வெட்டவெளி. பென்னாம் பெரிது. சுற்றிவர வானம் முழுவதும் வெள்ளிகள் மின்னின.

எங்கரவது வீடோ, கடைகளோ தெரிவதாயில்லை. காரின் வெளிச்சம் மட்டும் இருளை வெட்டியபடி முன்னால் ஓடிக்கொண்டிருக்கிறது......

''இந்த இடம் எதெண்டு தெரியுமோ......''

அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

''..... கல்லுண்டாய்'' — அப்பு சொன்னார். அந்தப் பெயர் கண்ணனுக்கு விசித்திரமாகப்பட்டது. ஒரு முறை சொல்லிப்பார்த்தான்.

வெளி, போய்க்கொண்டே இருந்தது. காற்றும், வெள்ளிகளும், இடைக்கிடை ஓடும் பற்றைகளும்.

எதிரில் ஒரு வண்டில். தட்டின் அடியில் கட்டியிருக்கிற அரிக்கன் லாம்பு ஆடஆட வருகிறது வண்டில் நெருங்க, கார் விளக்குப் பட்டு மாடுகளின் கண்கள் நீலமாய் மின்னுகின்றன.

கார், இடது புறம் ஒதுங்கி நின்று, பெரிய விளக்குகளை நூர்த்து வண்டிலுக்கு வழிவிட்டது. தடக் படக்கென்று சில்லுகள். மாட்டு வாடையும், புது நெல்லின் சுணைமணமும் சேர்ந்து வீசின.

அப்போதுதான் கண்ணன் அதைக் கவனித்தான், ''நெல்லு மூட்டைக்கு மேலை ஒரு ஆள் படுத்திருக்கு...'' அவன் கத்திய விதத்தில் தம்பியும், சின்னண்ணையும், நந்தனும் பின் கண்ணாடி வழியாக அவசரமாகப் பார்த்தார்கள்.

''கண்ணா, குழப்படி பண்ணாதை...'' — அப்பு சொன்னார்.

கார் ஓடத் தொடங்கியதும், மீண்டும் குளிர் காற்று உள்ளே வீசியது. சுகமாயிருந்தது.

கடல் மணம் அடித்தது'

''கடல் வருகுது...'' -பெடியன்களுக்கு உற்சாகமாயிருந்தது.

''அங்கை, அதென்ன விளக்குகள், கடலிலை?...''

தூர, வலப்பக்கம், தெல்லுத் தெல்லாக ஒளிப் பொருட்கள்...

''மீன்பிடித் தோணிகள் ..'' எத்தனை என்று எண்ண ஆரம்பித்தார்கள...

நேரே முன்னால், இன்னுந் தொலைவில், இன்னும் வெளிச்சப் புள்ளிகள். கனக்க. வரிசையாக மின்னி மின்னி மறைவது மாதிரி... ''அதுகளும் தோணிகளே?...''

''அதுதான் பட்டணம்.. .. பட்டணத்து வெளிச்சம் தெரியுது... எவ்வளவு வடிவா இருக்கு, பார்த்தீங்களா?''... என்றார் அப்பு. ''இன்னும் பத்து நிமிஷத்திலை அங்கே போயிடலாம்.''

இன்னும் பத்து நிமிஷந் தானா? — கண்ணனுக்கு ஏமாற்றமாயிருந்தது. இப்படியே போய்க் கொண்டிருக்க வேண்டும் போலிருந்தது......

## 2

*1973*

''பாத்திங்களா?-.... சொன்னன்...''—என்றான் நிமலன், பெருமையாக

ஒழுங்கை இலேசாக வளைகிற இடத்துடன் வளவுகள் முடிந்தன வெளி, விரிந்து கிடந்தது.

''சோக்கான இடம்...'' என்றான் கண்ணன், தன்னையறியாமல்.

வலப்பக்கம் ஒரு மடம் பழையது. பொளிகல்லு. அதற்கெதிரில் ஒழுங்கையின் இடதுபுறம் அதே வயலில் ஒரு கேணி. இந்த வெய்யிலிலும் தண்ணீர்.

''எப்படி?......'' என்றான் நிமலன், மீண்டும்.

''ஸ்ஸ் '' என்று வியந்தார்கள், இவர்கள்.

''இவ்வளவு மரத்திலும் தேவையான ஸ்பெஸிமன் எடுக்கலாம்...'' என்றான் குகன், முன்னால் காட்டி.

சாம்பல் பூத்த தடித்த இலைகளும் நீலப் பூக்களுமாய் ஒழுங்கையின் இருபுறமும் வரிசையாய் கண்ணுக்கெட்டிய தூரம் வரைவேலி மாதிரி அடர்ந்திருந்தது, எருக்கலை.

''கட்டாயம் இருக்கும், மச்சான்...'' தேவன்சொன்னான்.

பதினொரு மணி வெய்யில் கொழுத்திக் கொண்டிருந்தது .காற்றிலும் வெக்கை வந்தது, எருக்கம் பால் மணத்துடன், அந்த வரிசைகளுக்கு அப்பாலும் இப்பாலுமாய்அரிவு வெட்டுக்கு ஆயத்தமாக வயல்கள் விரிந்து கிடந்தன.

சைக்கிள்களை பூவரசடியில் விட்டுப் பூட்டிவிட்டு ஒவ்வொரு செடியாகப் பார்க்கத் தொடங்கினார்கள். மெல்லக் கொப்புகளை விலக்கி, இலை இலையாய் அடிப்பாகங்களைத் துருவத் தொடங்கினார்கள்.

,'பயோலஜி படிக்கிறதுக்கு இந்தக் கல்லுண்டாய் ஒரு பக்கா இடம் எண்டு சுந்ரராமன் மாஸ்ரர் சொல்லிருக்கிறார்...''

உண்மைதான்... நீங்கள் மாரியிலை வந்து பார்க்க வேணும்......'' — நிமலன் சொன்னான்.

''...இந்த வயலெல்லாம் நிரம்பி வழியும். அப்ப,

தவளைகூடச் செய்யலாம் ...''

''இப்ப முதல்ல வண்ணாத்திப் பூச்சியை முடி. பிறகு தவளையைப் பார்க்கலாம் ...'' — குகன் இடை வெட்டினான்.

''இப்ப, அராலிப் பாலத் தடியிலை மீன் இராதோ?''
''இருக்கும், ஆனா அது கலப்பு நீரெல்லோ... வளர்க்க ஏலாது...''

''போவமா, அங்கை?''

'இதை முடிச்சிட்டு அங்கை போவம் ..'' — குகன் வெளியின் விளிம்பில் தெரிந்த தென்னந் தோப்பைக் காட்டினான்.

''...இளநி அடிக்கேலுமெண்டா அடிச்சிட்டு, நேரே..... ராலிப் பாலம், பிறகு உப்பளம்...சரியா?',
''மச்சான், ஓடியா... ஓடியா...'' —கண்ணன் கத்தினான்.

ஓடினார்கள்

''இங்கை பார்...' மிக மெதுவாக ஒரு இலையை விலக்கிக் காட்டினான்.

பொன்னுருண்டை போல ஒரு கூட்டுப்புழு.

## 3

*1988*

''பயமாயிருக்கா?...' — வசந்தபுரம் சந்தி திரும்பும்போது கண்ணன் கேட்டான்.

''ச்...இதென்ன? இவ்வளவும் கண்டாச்சு...... இனி என்ன?'' — சீலன் உசாராகச் சொன்னான்.

''...நீங்கள் கூடவாறியள்... இவ்வளவு சனம் போய் வருகுது...''

''இதுகள் இருக்குது ..''— கண்ணன், இரண்டு சைக்கிள்களிலும் முன்னால் சொருகியிருந்த வெள்ளைக் கொடிகளைக் காட்டிச் சிரித்தான், கசந்தது.

மெல்ல மிதித்தார்கள்,

''உதிலை இரண்டாவது இருக்கு...'' —சீலன் சொல்லும் போதே,

''ஓ... மணக்குது... '' என்றான் கண்ணன்.

வீதிப் பரிசோதனை நடக்கிற இடம் இங்கிருந்தே தெரிந்தது. எதிர்ப்பக்கத்திலிருந்து வருபவர்கள் சைக்கிளில் ஏறிக் கொண்டிருக்கிற அதே இடத்தருகில் இவர்களுக்கு முன்னால் போகிறவர்கள் இறங்கி உருட்டத் தொடங்கினார்கள்...

''ஐஸீ ஆயத்தமா?...''
சட்டைப் பைக்குள் பார்த்தபடி ''ஓ...'' என்றான் கண்ணன்.

வேகத்தைக் குறைத்து மெல்ல இறங்கி முன்பின்னாக... நெஞ்சு படபடக்க..

தெருவின் அகலத்தில் முக்கால் வாசியைத் தடுத்துப் போட்டிருந்த பீப்பாய்களைத் தாண்டி... அடுத்து அதே மாதிரி எதிர்ப்பக்கம் கிடந்த மரத்தைத் தாண்டி ...இந்த நடைபாதை ஒரு இழுபட்ட 'எஸ்' ஸாக இருக்க...

வரிசையைத் தொடர்ந்து அவர்களை அணுகினார்கள்.

வரிசை நகர்ந்தது அடையாள அட்டையைக் கையில் எடுத்துக்கொண்ட போது, எத்தனை தரந்தான் என்றாலும் பயம் போகாது போலிருந்தது.

கூர்மீசையும் கூர்முழிகளுமாய் நின்ற சிப்பாய், கண்ணனின் சைக்கிள் கூடையைத் திறந்து வடிவாகப்பார்த்தான்.

'இதை இனிக் கழற்றி வைத்து விடவேண்டும். என்று தீர்மானித்தான் கண்ணன்.

பொக்கற்றுகளைத் தட்டும் போது, 'கனகாசு கொண்டு போகாதையுங்கோ......' என்று யாரோ சொல்லியிருந்தது நினைவு வந்தது.

''ப்போ...''— சிப்பாய், கண்ணனை விட்டு சீலனிடம் போனான்.

கண்ணன், தான் முன்னே நின்ற மற்றவனிடம் போனான். நீட்டிய கையில் ஐ.சி.யை வைத்தான். மறித்து வைத்திருந்த ஏழெட்டு அப்பாவிகளை சற்றுத்தள்ளி இரண்டு சிப்பாய்கள் காவல் பார்த்தபடி நின்றார்கள். நிலத்தில் குந்தியிருந்த மனிதர்களில் ஒரு பெடியன் அறிமுகமானவன். மீன் வியாபாரி. அவனைப் பார்த்துத் தலையசைக்கக் கூட திராணி வராத தன்னில் வெறுப்பாயுமிருந்தது...... என்னையும் மறிப்பான்களோ?

''ஸர்விஸ்? .....''— அட்டையைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தவனிடமிருந்து கேள்வி வந்தது.

''நோ...... ரீச்சர்...''

இவனுடைய மீசையும் முதலாவது ஆளுடையதைப் போலவே இருக்கிறது... இன்னும் முரடனாகத் தெரிகிறான்...

சிப்பாய், கண்ணனை ஏறிட்டுப் பார்த்தான். பார்வை, சந்தேகத்தில் தோய்த்திருந்தது. கண்ணனுக்கு வேர்த்தது...

''கோ......''

'கடவுளே...' என்று மூச்சு விட்டான். அடையாள அட்டையை வாங்கிப் பத்திரமாகச் சட்டைப் பையில் வைத்தபடி சைக்கிளை உருட்டலானான்.

பின்னால் சீலன் வருகிறானா?

புற்றீசல் போல இவர்கள் இப்படி மொய்த்திருக்க இடையில் தாங்கள்...... நினைக்க மயிர்க்கூச்செறிந்தது. திரும்பி வரும்போது மீண்டும் ஒரு தடவை இவர்களையெல்லாம் தாண்ட வேண்டும். இந்தக் கல்லுண்டாய் இப்படியாகுமென்று......

''இரண்டாவது கண்டமுந் தாண்டியாச்சு......''— சீலனின் குரல் பின்னாலிருந்து வந்தது.

சைக்கிளில் ஏறுகிற இடம் வந்ததும் ஏறினார்கள்.

''அடுத்ததும் கூப்பிடுதொலைதானாம்... தென்னந்தோப்பு...''

''இன்னும் எத்தினை,..... நாலு இடமோ?''

''போய் வாறதென்டால், குறைஞ்சது பத்து இடத்திலை செக்கிங்... இருபது கிலோமீற்றர் கூட இல்லை......''

## 4



*1989*

''உங்கட மோட்டார் சைக்கிள்தானா இப்பிடி ஓடுது?......''— பின்னால் உட்கார்ந்திருந்த ரேகா பகடி விட்டாள்.

''........காத்தாய்ப்பறக்கிற சைக்கிள், இப்ப காத்துப் போனது மாதிரி......''

''ரேகா, இந்த இடத்திலை இறங்கி நடந்து போகவும் நான் தயார் எங்கட நிலத்தின்ரை அழகுக்கு, அதின்ரை செழிப்புக்கு, அதையெல்லாம் பயன்படுத்தாம விட்டிருக்கிற எங்கட முட்டாள் தனத்துக்கு— அல்லது அதைச் செய்ய முடியாத எங்கட நிலைமைக்கு— எல்லாம் இது நல்ல உதாரணம்... இந்த இடத்தை எனக்கு எவ்வளவு பிடிக்கும் என்டு

உனக்குத் தெரியுமா? ....'' என்றான் கண்ணன்.

''உங்கட விருப்பத்துக் கேத்தபடிதான் இப்ப ஒவ்வொரு நாளும் இந்தக் கல்லுண்டாய் வெளியாலை இரண்டு தரம் தாண்டக் கிடைச்சிருக்கே...'' — அவள் சிரித்தாள்.

''...... நாங்கள் மனசார விரும்புறதெல்லாம் எப்படியோ ஒருநாள் கிடைச்சே தீரும். எனக்கு அதிலை நம்பிக்கை இருக்கு......''

கண்களில் குறும்பும் நாணமும் கலந்து ஒளிந்தன.

**5**

*1990*

''இந்தச் சைக்கிளைக் கண்டு பிடிச்சவனுக்கு ஒரு சிலை வைக்க வேணும்...' 'என்றார், சொலமன்.

''மெய்தான்......'' என்றார் மூர்த்தி.

''... இதில்லாட்டி எங்கட கதியென்ன, இப்ப?''

''முந்தி இப்பிடி ஓடியிருப்பமா, எப்பாலும்?''

''பொறுங்கோ .. ஏதோ இரையிறமாதிரிக் கிடக்கு ...''— கண்ணன் இடைமறித்தான்.

''சி, அது காத்து...''

''இல்லை அந்தா...''— அவன் காட்டிய திசையில், தூர, சின்னதாக இரண்டு பொம்மர்கள் வழுகி வருவது தெரிகிறது...

இந்த இடத்தில் இவர்களுக்கு மேலே மந்தாரம் போட்டிருக்கிறது. ஆனால் பொம்மர்கள் தெரிகிற இடத்தில் மெல்லிய நீலமாய் வானம் தெரிந்தது வெய்யிலில் விமானங்கள் மினுங்கின.

''பலாலியிலையிருந்து வாறான்... கோட்டைக்குத் தானோ?'' — என்ற சொலமன் சொன்னார்.

''...... உம்மட காது இதுகளுக்கு நல்லாய்ப் பழகி விட்டுது, இப்ப...''

விமான இரைச்சல், இவர்களுக்கு முன்னால் போய்க் கொண்டிருந்தவர்களுக்கும் கேட்டிருக்க வேண்டும். அவர்கள் சைக்கிள்களும் வேகங் குறைந்து குழம்புவது தெரிகிறது.... எதிர்ப்பக்கமிருந்து வந்த சைக்கிள்காரர்கள் வேகத்தை அதிகரிக்கிறார்கள்....

சுத்தம் இப்போது தெளிவாகவே கேட்கிறது.

இரண்டல்ல, மூன்று...

'கோட்டைக்குத்தான்....''

''மாட்டொழுங்கையாலை திரும்புவமா? ...''

''எங்க மூண்டு பேருக்கும் ஒரு குண்டை வீணாக்க மாட்டான்... பயப்பிடாம வாரும்...''

''ஹெலி, கிலி வந்தா?.... இந்தக் கல்லுண்டாயிலை ஒதுங்க ஒரு இடமில்லை''

''வாறதாத் தெரியேல்லை ... .அதுக்கிடையிலை நாங்கள் தாண்டி விடலாம்.... வாங்கோ''

விமானங்கள் கோட்டையைச் சுற்றி வட்டமிடுவது வடிவாகத் தெரிகிறது. ''நாளாந்த நிகழ்ச்சியாய்ப் போட்டுது இது, எங்களுக்கு''...

''என்ன வாழ்க்கை இது? இப்பிடி ஒவ்வொரு நாளும் ...'' — மூர்த்தி சலித்தார். ''......இதுவும் ஒரு வாழ்க்கையா?''

''இதுதான் வாழ்க்கை மெய்யான வாழ்க்கை இதுதான். வாழ்க்கை என்கிறதுக்கு இப்பதான் அர்த்தமிருக்கு ...'' — கண்ணன் சொன்னான். நான்தான் இதைச் சொன்னேனா என்றிருந்தது.

''அந்தா, அந்தா... போடப் போறான்... போட்டிட்டான், போட்டிட்டான்...'' — மூர்த்தி பதறினார்.

குத்திப்பதித்த விமான மொன்று மேலெழுவது தெரிகிறது... அது வட்டத்தைத் தொடரும் போது வட்டமிட்டுக் கொண்டிருந்த இன்னொன்று கீழே சறுகி... .. குண்டுகள் வெடிக்கின்றன... இங்கேயே அதிர்கிறது... படம்பார்ப்பது போல இருக்கிறது. ஆனால் இது மெய் தினசரி வேலைக்குப் போய் வரும் போதெல்லாம் இப்படிக் காண எத்தனை பேருக்குக் கொடுத்து வைத்திருக்கிறது, உலகில்?

''பாத்தீங்களா இது என்ன சீவியம்? ...''

என்றார் மூர்த்தி, மீண்டும்.

''மூர்த்தி, நீங்கள் கடவுளை நம்புறது உண்மையெண்டால் உப்பிடியெல்லாம் பேசக்கூடாது......'' என்றார் சொலமன், உரிமையுடனும். உறுதியுடனும்.

**6**

*2003*

**வ**சந்தபுரம் விளையாட்டரங்கிலிருந்து கரவொலிகளும் உற்சாகக் கூச்சல்களும் கேட்கின்றன.

'' 'ஏஷியா - 2003' போட்டிகள் நடக்குதெல்லே..... அதுதான் தெருவிலும் இவ்வளவு சனம்...'' வேகத்தைக் குறைக்க வேண்டியிருந்தது. கூட்டத்தில் வெளிநாட்டவர்கள் கணிசமாகவே தெரிந்தார்கள்

ஸ்ரேடியத்திற்கு எதிர்ப்புறம், தெருவுக்குத் தெற்கே கடலேரி பரந்து கிடக்கிறது. இடது பக்கம் நாவாந்துறையிலும் வலதுபக்கம் காக்கைதீவிலுமாக மீன்பிடித்துறைமுகங்கள், எதையோ பிடிக்கிற பெருவிரலும் சுண்டுவிரலும் போலக் கடலுக்குள் நீட்டிக் கொண்டிருப்பது தெரிகிறது.

''கொஞ்சம் ஆழமாக்கிவிட, இந்தக் கடல் எப்பிடியிருக்கு!''

கரையின் தூய வெண்மணற்பரப்பிடை பூம்பாத்திகளும், பூவரச மரங்களின் கீழ் சிமேந்து இருக்கைகளும் மாறி மாறி...

''மூந்தி, இவடத்திலை மூக்கைப் பிடிச்சுக் கொண்டு போற நாங்கள்... நினைவிருக்கா?''

''குப்பை கூழம் நாத்தமெல்லாம் பழங்கதை....''

வீதி, முன்னரைப் போல் மூன்று பங்கு அகலமாக மாறியிருக்கிறது. வழுவழுவென்று சுத்தமாக தார்ப்பாயை விரித்தது போல் நீளமாக தெருத் தீவுகளிலும், கரையோர நடைபாதைகளிலும் புளியும், வாகையும், மலைவேம்பும் ஓங்கிக் கிளை பரப்பத் துடிக்கின்றன...

காக்கைதீவுச் சந்தியில் கடைகள்களை கட்டியிருக்கின்றன. கடைத்தெருவின் பின்னால் ஒரு நவீன குடியிருப்பும், அதை அண்டி— ஆனால் இந்தப் பரபரப்புகளிலிருந்து விடுபட்டு— தென்னந்தோப்பும். அடர்ந்துகிடக்கிறது. தோப்பிடை இருந்து அம்மன் கோவில் மாலைப்பூசை மணியோசை கேட்கிறது ..

''இவடம் அவ்வளவு மாறேல்லை......''

வலப்புறம் வயல்களும் இடப்புறம் தென்னஞ்சோலைகளும். கூடுதல் அடர்த்தியும், அழகும், பசுமையும்.

கடைகளும் கட்டிடங்களும் அடுத்த சந்தியைக் குறிக்கின்றன. மூந்திய மாட்டொழுங்கை! எவ்வளவு மாறிவிட்டது... ..

தெற்குப்பக்கம், தென்னந்தோப்பைச் சுற்றிவந்த கடல், இப்போ இங்கே தெருவிலிருந்து கூப்பிடு தொலைக்குள் வந்திருக்கிறது... 'படகுக்கழகம்' என்ற பெயரும், மண்டபத்தைத் தாண்டி அலங்காரப் படகுகளும் தெரிகின்றன. அது தாண்டியதும்

கடற்கரை மீண்டும் விரிகிறது தெருவோடு கூடவே வருகிறது.

வண்ணக் குடைகளும், விற்பனை வண்டிகளும், காற்று வாங்க வந்தவர்களுமாய் அந்த இடம் கலகலவென்று...

இறங்கி வலப்பக்கம் நடந்தார்கள். ஒரு நீள இரட்டை வடமணி மாலை போலத்தெரு...

கோவிலின் பின்புறம் சற்றுத் தள்ளியிருந்த மேட்டில் ஏறினார்கள் மேலே வந்ததும், மறுபுறம் ஏரி தெரிந்தது. இது நன்நீர் ஏரி. குட்டிக்கடல் போல. நடுவில் பச்சைப் பசேலென ஒரு குட்டித்தீவு.

''பாலம் வரை போகுது ஏரி... வழுக்கையாத்துத் தண்ணி இப்ப கடலுக்குள்ளை வீணா ஓடுறதில்லை ..''

பாலம் இங்கிருந்து வடிவாகத் தெரிந்தது. தெற்கே, சற்றுத் தள்ளி, புது உப்பளக்கட்டிடங்களும். செவ்வானம் பூத்திருந்த பின்னணியில் இவை நிழலுருக்களாய்...

ஏரிக்கரையில் நடந்தார்கள். அது ஒரு தெரு அகலமிருந்தது. ஆனால் நடைபாதைமட்டும். உடற்பயிற்சிக்காக விரை நடை நடப்பவர்கள்... கல்லூரி மாணவர் குழுவொன்று சிரிப்பும் கும்மாளமுமாய் வருகிறது ..

வெறுமையாயிருந்த சீமேந்து வாங்கொன்றில் போய் அமர்ந்தார்கள். நீர்ப்பரப்பில் மின் விளக்குகளின் ஒளிக்கோடுகள் நெளிகின்றன. தெருவில் போக்குவரத்து அமளியாக இருக்கிறது, என்றாலும் இந்த இடம் சற்றுத்தள்ளி.

காற்று இப்போது நல்லாகவே வீச ஆரம்பித்தது. வானில் ஒவ்வொன்றாக வெள்ளிகள் சிமிட்டத் தொடங்கின. □□

## பயம் வேண்டாம்!

**நாக, பத்மநாதன்**


வரவு அதுபோல செலவு. இவை இரண்டையும் கவனி. பொருளியற் தாக்கத்தை வெல்வதற்கு இந்த நிதானம் அவசியம். செலவுகள் பெருகல், வருவாய் குறுகல் என்ற கட்டுக்கடங்காத் நிலை எழும்போது,

எம் வலிமைகூட வேண்டும் வருவாயைத் தேடும் முயற்சிகளுடன் செலவினங்களை அடக்கவும் தெரிய வேண்டும். சுகங்களைத் துறந்து செலவுகளைக் குறைப்பவன் எவ்வளவோ சுதந்திரம் பெறுகிறான். சிக்கனம் சேமிப்பு இவனது போர்க்கருவிகள் ஆகின்றன. இவன் பயங்கொள்ள வேண்டியதில்லை,

குறள் 478

# சங்ககால ஈழம் தமிழர் பிராந்தியங்களில் ஒன்றா?

ப. புஸ்பரட்ணம்



தற்காலத்தில் இலங்கை, ஸ்ரீலங்கா என அழைக்கப்படும் இந்நாடு ஆதிகாலத்தில் தம்பபண்ணை தாமரபர்ணி, இரத்தினதுய்பம் ஈழம், லங்கா எனப்பல வகைப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டதை இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் காண முடிகின்றது. இவற்றுள் ஈழம் என்னும் நாடு பற்றி பட்டினப்பாலையும், திருப்பரங்குன்றப் பிராமிக்கல்வெட்டும், பிற்காலத்துப் பாண்டிய, சோழ விஜயநாயக்கர் காலக் கல்வெட்டுக்களும் உறுதிசெய்கின்றன. ஆயினும் இலங்கையின் பிரதான வரலாற்று மூலங்கள் எதிலும் இது வரை இலங்கை ஈழம் என அழைக்கப்பட்ட தற்கான சான்றுகள் கண்டு பிடிக்கப்படவில்லை. இதனால் ஆதி காலத்தில் ஈழம் என்பது இலங்கையைக் குறிக்காது கேரள நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழவரைக் குறித்திருக்கலாம் எனக் கருதுவோருமுண்டு. ஆனால் அங்கு இப்பெயர் ஒரு இடத்தைக் குறிக்காது குறிப்பிட்ட ஒரு சமூகத்தைக் குறிப்பதனால் வரலாற்றாசிரியர் பலரும் இக் கருத்தை ஏற்கவில்லை.

ஆயினும் இத்தகைய கருத்து முரண்பாடுகளை நீக்கக் கூடிய வகையில் ஈழம் பற்றிச் சான்றுகள் முதன் முறையாகத் தமிழ்ப்பிராந்தியங்களில் ஒன்றாகிய பூநகரியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் சங்க காலத்தின் சம காலத்தவையெனக் கொள்ளத் தக்க இரண்டு மட்பாண்ட பிராமிக் சாசனங்கள். (கி. மு. 3ம் 2ம் நூற்றாண்டுக்குரியவை) எமது தொல்லியல் மேலாய்வின் போது மண்ணித்தலையில் கிடைத்திருப்பது இங்கே சிறப்பாக குறிப்பிடத்தக்கது. இவற்றுள் மூன்று எழுத்துக்களைக் கொண்ட முதலாவதுசாசனம் பெருமளவு உடைந்து இருப்பதனால் அதனை ஒரு முழு சாசனமாகக் கொள்ள முடியாதிருக்கின்றது.

ஆயினும் இதன் முதலிரண்டு எழுத்துக்களிற்கும் ஈழ என்ற ஒலிப் பெறுமானத்தைக் கொடுத்து ஈழஎனவாசிப்பது பொருத்தமாகத் தெரிகின்றது. இரண்டாவது சாசனத்தில் இரண்டு எழுத்துக்கள் காணப்பட்டாலும் எழுத்துக்களுக்கிடையிலான இடைவெளியைக் கொண்டு இதனை யொருமுழுச் சாசனமாகக் கொள்ள முடிகின்றது.

இது 'ஈலா' என்ற வாசகத்தை கொண்டது. இவை இரண்டும் ஈழத்தையே குறிப்பதாகக் கொள்ளலாம். அக்கால உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகத்தில் பொருட்களின் கொள்கலன்களாக மண்பானைகள் பயன்படுத்தப்பட்டதனால் அப் பொருட்களுக்குரிய நாடுகளின் பெயரைக் குறிக்க கொள்கலன்களில் அந்நாட்டின் பெயர் எழுதப்பட்டிருக்க வேண்டும். இதனையே பூநகரியில் கிடைத்த ஈழ, ஈலாஎன்ற பெயர் கொண்ட மட்பாண்டச் சாசனங்களும் உறுதி செய்கின்றன. இச்சாசனத்தில் உள்ள 'ஈ',,ழ' போன்ற வரி வடிவங்கள் தமிழ் நாட்டிற்கே உரிய தனித்துவமான தமிழ் எழுத்துக்களாகும். இதில் உள்ள 'ழ' என்ற எழுத்தை பூநகரி தவிர்ந்த இலங்கையின் வேறு எந்த இடத்திலும் கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை

இப்புராதன ஈழம் என்ற இடப்பெயர் தொடர்ந்தும் பூநகரியிலுள்ள ஒரு பிரதேசத்திற்கு ஈழஊர் என இடப்பட்டு பாரம்பரியமாக அழைக்கப்பட்டு வந்ததை போர்த்துக்கேய ஆவணங்களில் இருந்தும், புராதன ஓலைச் சுவடிகளில் இருந்தும், அறிய முடிகின்றது. 1911 ம் ஆண்டு பொன்னாவெளியைச் சேர்ந்த சி. சரவணமுத்து என்பவரால் எழுதி முடிக்கப்பட்ட கந்தபுராண ஏட்டின் இறுதிப் பாகத்தில் இந்த ஏட்டை எழுதி நிறைவேற்றியது பல்லவராயன் கட்டைச் சேர்ந்த ஈழவூர் குடிவேழான் நீலகண்டன், மகன் அய்யம்பிள்ளை மகன் சிதம்பனார் மகன் சரவணமுத்து எனக் கூறப்பட்டுள்ளது.

# "மாற்றம்"

நாக. சிவசிதம்பரம்


விழுதுகள் தாமே
வேர்விட ஓடி
மண்ணில் புதைந்திடும்
காலம்!

மடியிடை வாழ்ந்த
மழலைகள் கூடி
மாற்றம் விதைக்குது
மண்ணில் - இந்த

மாற்றங்கள் இன்று
மர நிழல் ஆகி
வானம் மறைக்குது
தன்னில்!

நிழல் தந்துதவா
நெட்டைகள் இன்னும்
நேர்வழி தேடா
முடங்கள் - என்றும்
வளர எண்ணாத
மரங்களை இந்த
மண்ணும் மறந்ததோர்
மாற்றம்.

வெய்யிலில் நீரின்றி
வேளை மழையின்றி
கல்லு முள்ளிடையினில்
காய்ந்தும் - பலவழி
ஆடுமாடுகளின்
அடிமிதி பட்டும் - ஆல்



ஆழ வளர்க்குது
வேரை.

வேர் கொண்டு வாழ
வழி செய்த மண்ணுக்கு
நீர்தருதல் ஆலின்
தாகம் - தானே
நீர் தந்து நிழல் தந்து
நிமிரும் வரை எதிலும்
ஆறாதிருக்கும் அதன்
வேகம்!

பாரத்துடன் கூடப்
பலமாய் நிமிர்ந்த கிளை
ஓங்கப் பல விழுது
தாங்கும் - புயல்
கூடிப் பலமாக
கொடுமை புரிந்தாலும்
வீழ விடாது முனை
நீளும்!

இலைகளும் தங்கள்
இடைவெளி நீங்க
'இது எம் பணி' எனக்
கூடும் - எதிர்
வருந்துய ரோடும்
வாழ்வு இம்மண்ணில்,
வாழ்வமென்றே இசை
பாடும்!

இதன் மூலம் இவ் ஈழ ஊரைச் சேர்ந்த நான்கு தலைமுறையினரைப் பற்றி அறிய முடிகின்றது. தற்போது இவ்ஈழ ஊர் சோழரோடு தொடர்புடைய பல்லவராயன்கட்டுக்கும் பாண்டியரோடு தொடர்புடைய வீரபாண்டியன் முனைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் அமைந்திருப்பது இங்கே சிறப்பாக குறிப்பிடத் தக்கது. தற்காலத்தில் வேரவில் என அழைக்கப்படும் கிராமமும் முன்பு ஈழஊர் என அழைக்கப்பட்டதற்கு ஆதாரங்கள் உண்டு. ஈழம் என்ற சொல்லுக்கு பொன்கள் என்ற பொருள் உண்டு. பொதுவாக இந்திய வர்த்தகர்கள் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டபோது அந்நாடுகளில் கிடைத்த பொருட்களைக் கொண்டே அந்நாட்டின் பெயரை அழைத்தனர். குறிப்பாக பொன்னுக்கு பெயர் போன தென்கிழக்காசிய நாடுகள் 'சுவர்ண தீபம்', 'சுவர்ணபூமி' என இந்திய இலக்கியங்களில் வருவது நினைவு கொள்ளத்தக்கன. இதே போல் இலங்கையும் பொன்னுக்குப் பெயர் போன நாடு என்ற கருத்து இந்திய இலக்கியங்களில் வருவதைக் காணலாம்.

இதை அடிப்படையாகக் கொண்டே இலங்கைக்கு ஈழம்என்றபெயர் வந்ததெனக் கூறலாம். இதனால் பூநகரி ஈழ ஊரின் தொடர்ச்சியாக உள்ள பொன்னா வெளி என்ற இடமும் ஆதிகாலத்தில் ஈழ ஊர் என அழைக்கப்பட்டிருக்க வேண்டும். எனக் கொள்ளலாம். 2000 வருடங்களுக்கு முற்பட்ட தமிழ் நாட்டுப் பிராமிச் சாசனம் ஒன்று ஈழை ஊரைச் சேர்ந்த வணிகன் ஒருவன் சமணத் துறவிக்குச் செய்த தானம் பற்றிக் கூறுகின்றது. தமிழ் நாட்டில் ஈழையூர் எனற இடம் இருந்ததற்கான ஆதாரம் இல்லாதிருப்பதனால் இச் சாசனத்தில் வரும் ஈழையூர் பூநகரி ஈழ ஊராக இருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

ஆதிகாலத்தில் ஒரு நாட்டின் குறிப்பிட்ட இடத்திற்குரிய பெயரானது காலப்போக்கில் அந்த நாட்டிற்கேயுரிய பொதுவான பெயராக மாறியதை உலக நாடுகள் பலவற்றின் பெயர்கள் தோன்றிய வரலாற்றிலிருந்து அறிய முடிகின்றது. இதனால் ஈழம் என்ற இடப்பெயர் ஆதிகாலத்தில் முழு இலங்கையைக் குறித்ததாக அல்லது இலங்கையின் ஒரு பாகத்திற்குரிய இடமாக இருந்ததா என்பது ஆய்விற்குரியதாகும். சங்ககால இலக்கியமான பட்டினப்பாலையில் ஈழத்துணவு பற்றியும் திருப்பரங்குன்றப் பிராமிக் கல்வெட்டில் ஈழக்குடிடபிகன் வழங்கிய தானம் பற்றியும் சுருக்கமாக கூறப்பட்டுள்ளது. ஆனால் ஒன்பதாம் நூற்றாண்டுக்குரியதாகக் கருதப்படும் உதயணன் பெருங்கதையில் இந்நாடு இலங்கை ஈழம் என இரண்டாகப் பிரித்துக் கூறப்பட்டுள்ளது. பத்தாம் நூற்றாண்டு இராஜராஜசோழக் கல்வெட்டில் வரும் முரட்டொழில் சிங்கள ஈழ மண்டலம் என்ற ஆதாரம் இதனை மேலும் வலியுறுத்துகின்றது. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு வடஇலங்கையை ஈழம் எனவும், விஜயநகர கல்வெட்டு யாழ்ப்பாணத்தை ஈழம் எனவும் கூறுகின்றது. இவைகளுக்குச் சற்று பிற்பட்ட கால நன்னூல் மயிலைநாதர் உரையில் தமிழ்நாட்டைச் சூழஉள்ள நாடுகளாக ஈழமும் சிங்களமும் தனித்தனியே கூறப்பட்டுள்ளது. சில சான்றுகளில் இந்த ஈழம் முழு இலங்கையையும், பிற்பட்ட சான்றுகளில் சிங்களவர் வாழ்ந்த பகுதியையும் குறிக்கப்பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஒரே வரலாற்று மூலத்தில் ஒரு இனத்தின் பெயரால் சிங்கள நாடு கூறப்பட்டு அதேவரலாற்று மூலத்தில் ஈழமும் கூறப்படுவதினால் இந்த ஈழம் தமிழர் வாழ்ந்த இலங்கையின் இன்னொரு பாகமாக இருந்திருக்கலாம் எனக் கருத இடமளிக்கின்றது. தற்காலத்தில் ஒரு பிரதேசத்தின் எல்லையை சரியாக வரையறுத்துக் கூறுவதைப் போல் அக்காலத்துற்குரிய இதன் எல்லையை வரையறுத்துக் கூற முடியாவிட்டாலும் இவ் ஈழம் பூநகரிஉள்ளிட்ட வடக்கிலங்கையின் பெரும்பாகத்தைக் குறித்திருக்கலாம் எனக் கருதலாம். அவ்வாறு கூறுவதற்குச் சில காரணங்களும் உண்டு. கி. பி. 1ம் 2ம் நூற்றாண்டில் வாழ்ந்த தொலமி, பிளினி போன்ற மேற்கு நாட்டார் குறிப்புகளிலும் பெரிப்புஸ் என்ற நூலிலும் இலங்கை 'தப்பிரபென்' என அழைக்கப்பட்டது. இதனை கி. பி. 6 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மகாவம்சம் என்ற இலங்கை நூலும் உறுதி செய்கின்றது. இராமாயணத்திலும் சிலப்பதிகாரத்திலும் இந்நாடு இலங்கை என அழைக்கப்பட்டதை பிற்கால சிங்கள, சோழக் கல்வெட்டுகளும் இலக்கியங்களும் உறுதி செய்கின்றன.

தமிழ் நாட்டுடன் இலங்கை கொண்டிருந்த பாரம்பரிய அரசியல் வர்த்தக பண்பாட்டு உறவுகளை இருநாட்டு வரலாற்று மூலங்களும் எடுத்தியம்புகின்றன. ஆனால் தமிழ் நாட்டு வரலாற்று மூலங்களில் மட்டும் வரும் 'ஈழம்' என்ற நாடு பற்றி இலங்கை வரலாற்று மூலங்கள் எதுவுமே உறுதி செய்யவில்லை. உண்மையில் இந்த ஈழம் முழு இலங்கையையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்குமாயின் இலங்கை வரலாற்றைக் கூறிய பாளி இலக்கியங்களில் இது இடம்பெற்றிருக்கும். அவ்வாறு இடம்பெறாமைக்கு பௌத்த சிங்கள வரலாற்று முதன்மைப்படுத்திக் கூறிய இந்நூல்கள் இதற்குப் புறம்பான பண்பாடுடைய பிரதேசத்தைக் கூறாது. தவித்திருக்கலாம். அதே வேளை இந்த ஈழம் பற்றி தமிழ் நாட்டு வரலாற்று மூலங்களில் மட்டும் குறிப்பிடப்பட்டிருந்தமைக்கு பண்பாட்டு ரீதியில் இரு பிரதேசமும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையே காரணமாக இருக்கலாம். இதனை அண்மைக் காலத்

தில் இப்பிரதேசத்தில் கிடைத்த தொல் பொருள் சின்னங்களும் உறுதி செய்கின்றன. சங்க இலக்கியங்களில் ஒன்றான பட்டினப்பாலையில் வரும் 'ஈழத்து உணவும் காளகத்தாக்கமும்' என்ற செய்யுளடி இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்கு உணவு ஏற்றுமதி செய்யப்பட்டதை உறுதி செய்கின்றது.

ஆனால், இலங்கை வரலாற்று மூலங்கள் எதுவுமே இக்காலப்பகுதியில் இலங்கையிலிருந்து தமிழ் நாட்டிற்கு உணவு ஏற்றுமதி செய்யப்பட்டது பற்றிக் கூறவில்லை. மாறாக இலங்கையில் பஞ்சங்கள் ஏற்படும் காலங்களில் எல்லாம் தமிழ்நாட்டிலிருந்து உணவு இறக்குமதி செய்யப்பட்டதோடு பௌத்த பிக்குகள் பல சந்தர்ப்பங்களில் அங்கு சென்று தங்கியதாக இவ் வரலாற்று மூலங்கள் குறிப்பிடுகின்றன. அப்படியாயின் பட்டினப்பாலையில் வரும் ஈழம் அநுராதபுர அரசின் ஆதிக்கத்திற்கு உட்படாத தனியரசாக இருந்ததா? என்ற கேள்வி எழுகின்றது.

ஏனெனில், இக்காலப் பகுதியில் எழுந்த பாளி, சிங்கள இலக்கியங்கள் அநுராதபுரத்தை மையமாக கொண்டு ஆட்சி புரிந்த மன்னர்களையும் அவர்களின் அரசியல் பௌத்த சமய சாதனைகளையும் கூறுகின்றன. அதே வேளை அநுராதபுர அரசின் ஆதிக்கத்திற்குட்படாத ஏனையபிராந்தியங்கள் பற்றி அதிகம் கூறவில்லை. இதனைப் பிற வரலாற்று மூலங்கள் உறுதி செய்கின்றன. இதனால் பட்டினப்பாலையில் வரும் ஈழத்தை இலங்கையின் இன்னொரு பிராந்தியமாகக் கருத இடமளிக்கின்றது. பேராசிரியர் குணவர்த்தன சங்ககால ஈழம் ஒரு சிற்றரசுக்குட்பட்ட மக்களைக் குறிப்பதாக கூறியுள்ளமை இங்கு நோக்கத்தக்கது.

## அநுராதபுர அரசை வெற்றி கொண்ட தமிழ் மன்னர்கள் யார்?

இலங்கையின் ஒரு பாகமாக ஆதிகால ஈழத்தைக் கொள்கின்ற போது அநுராதபுர அரசு மீது மேற்கொள்ளப்பட்ட தமிழ் படையெடுப்பாளர்களை பொறுத்து இது வரை கூறப்பட்ட கருத்துகளும் மறுபரிசீலனை செய்ய வேண்டியேற்படலாம். ஆதிகால இலங்கையில் பல சிற்றரசர்களும் பல நில குழுத்தலைவர்களின் ஆட்சியும் இருந்ததைப் பற்றி பாளி இலக்கியங்களும் பிராமிக் கல்வெட்டுகளும் கூறுகின்றன.

மகாவம்சம் வடக்கே இருந்த நாகஅரசு பற்றிக்கூறுகின்றது. எமதுஆய்வில் கிடைத்த தமிழ் பிராமி எழுத்துகள் இங்கு ஆதியில் தமிழ்மொழிவழக்கில்இருந்ததையும் பரமன் கிராயில் கிடைத்த 'வேள்' பற்றிய சாசனமும் சங்க காலத்தையொத்த வேளீர் என்ற குறுநில மன்னர்கள் ஆட்சி புரிந்திருக்கலாம் என்பதையும் உறுதி செய்கின்றன. மகாவம்சம் புத்தர் நாகதீபம் மன்னனுக்கிடையே ஏற்பட்ட தகராற்றை தீர்த்து வைத்ததாக கூறுகிறது. அநுராதபுரம் அக்கால ஆட்சிப்பீடமையமாக விளங்கினாலும் தெற்கே றோகணப் பிரதேசத்தில் இருந்து படையெடுத்து வந்த சிங்கள மன்னர்களும், வடக்கிலிருந்து படையெடுத்து வந்த தமிழ்மன்னர்களும் இவ்வரசை பல முறை கைப்பற்றி ஆட்சி செய்ததாக பாளி இலக்கியங்கள்கூறுகின்றன. அநுராதபுரத்திற்கு வடக்கேயிருந்து படையெடுத்து வந்தவர்களை தமிழர்கள் எனவும் சோழநாட்டவர் எனவும் அக்கரையைச் சேர்ந்தவர்கள் எனவும் இந்நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு படையெடுத்து ஏறத்தாள பத்துத் தமிழ் மன்னர்களின் ஆட்சிகிறிஸ்துவுக்குமுன் எண்பது ஆண்டுகள் நிலவியதாகத் தெரிகிறது.

ஆனால் இலங்கையுடன் தமிழ் நாடு கொண்டிருந்த வர்த்தக மையத் தொடர்பு களை கூறும் சங்ககால இலக்கியங்கள் அரசியல் தொடர்பைப் பற்றியோ படை யெடுப்புகள் பற்றியோ ஏதும் கூறவில்லை. அத்துடன் சங்ககாலத் தமிழ் மன்னர் களின் பெயர்களும் இலங்கையில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்களின் பெயர்களுக்கு மிடையே அதிக ஒற்றுமை இருப்பதாகவும் தெரியவில்லை. இதனால் அநுராதபுர அர சை வெற்றி கொண்ட தமிழ் மன்னர்கள் அனைவரும் தமிழ் நாட்டிலிருந்து படை யெடுத்தார்களா? அல்லது இலங்கையின் இன்னொரு பாகத்திலிருந்து படையெடுத்து ஆட்சியைக் கைப்பற்றினார்களா? என்பது ஆய்வுக்குரிய விடயமாகும்.

அநுராதபுர அரசுக்கெதிராக றோக ணத்திலிருந்து அரசியல் கிளர்ச்சிகள் ஏற் பட்டிருக்குமாயின் ஏன் வடக்கிலிருந்து கிளர்ச்சிகள் ஏற்பட்டிருக்க முடியாது? அநு ராதபுர அரசை முதன்முறையாகக் கைப் பற்றி 22 வருடங்கள் ஆட்சி புரிந்த சேன, குத்திக என்ற தமிழ் மன்னர்கள் குதிரை வர்த்தகர்களின் பிள்ளைகள் என மகாவம் சம் கூறுகின்றது. பூநகரியிலுள்ள மழாப்பு ஆற்றங்கரையை அடுத்த பிரதேசம் குதிரை கட்டின தீவு என இந்தகாலத்தில் அழைக் கப்படுகின்றது. இங்கு ஆதித் தமிழ் குடி யிருப்புகள் இருந்ததற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. இவ்விடத்தை அண்டிக் காணப்படும் இயாகம். பல்லவராயன் போன்ற இடங்களில் அண்மையில் காடு கள் அழிக்கப்பட்டு நிலங்கள் திருத்தப்பட்ட போது பெருங்கற்காலத் தாழிகளின் உடைந்த பாகங்கள் பரவலாக வெளிவந் துள்ளன. இன்றும் இங்குள்ள வயல்வெளி களில் இவற்றைப் பரவலாக காணமுடி கின்றது.

### தற்கொலைப்படை

ஒக்னோத்தீவு இரண்டாம் உலகமகாயுத்த காலத்தில் யப்பா னிய நாட்டின் மிகவும் பிரதான மான பாதுகாப்புத் தளமாக இருந் தது. 1945ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறன்று அமெரிக்கா இங்கி லாந்து ஆகிய நேசநாடுகளின் 183000 அதிரடிப்படையினர் 1321 கப்பல்களில் 200 மேற்பட்ட நாச காரிகளுடன் யப்பானிய ஒக்கி னோதீவைக் கைப்பற்றப் புறப்பட் டனர். நேச நாடுகளின் பாரிய தாக்குதல்களைச் சமாளிக்க யப் பான் தனது தற்கொலைப் படை யை பாவிக்கத்தீர்மானம் எடுத்தது

இத்தற்கொலைப் படையின ருக்கு கமிக்கசா பறப்பவர்கள் எனப்பெயர் இட்டனர். உடலில் கட்டிய பாரிய வெடிகுண்டுகளு டன் ஆகாயத்திலிருந்து யுத்த விமானத்தால் எதிரியின் யுத்தக் கப்பல்களில் குதிப்பது என்பது ஏற்பாடாகும். இந்தத்தற்கொலைப் படையினரை சொர்கத்தின்மைந்தர் கள் என வர்ணித்தனர்.

இந்த யுத்தத்தில் யப்பான் 110,000 பேரையும், 7830 விமா னங்களையும் பல கப்பல்களையும் இழந்தது.

இதில் அமெரிக்கா 12281 போர் வீரர்களையும், 768 விமா னங்களையும் 368 கப்பல்களை யும் இழந்தது. இதில் 164 யுத்தக் கப்பல்களைச் சேதமாக்கியும், 26 கப்பல்களை மூழ்கடித்த பெருமை யப்பானிய தற்கொலைப் படை யினருக்கே.

☐ வேலாயுதபிள்ளை

இச் சான்றுகள் ஆதிச்ச நல்லூர், பொம்பரிப்பு ஆதிகாலநாகரிகத்தை நினைவு படுத்துகின்றன. இங்கு கிடைத்த இப்பெருங் கற் பண்பாட்டுச் சின்னங்கள் சிலவற்றை அண்மையில் அநுராதபுர அகழ்வாய்வுக்குப் பொறுப்பாக இருந்த புகழ் பெற்ற தொல் வியலாளர் சிரான் தெரணியகலா என்பவரி டம் காட்டிய போது அவை மிகத் தொன் மையான திராவிட மக்களின் எச்சங்கள் எனக் குறிப்பிட்டமை இங்கு நினைவு கொள்ளத்தக்கது. இதன் மூலம் சங்க காலப் பண்பாட்டினை ஒத்த தமிழர் நாகரி கம் இருந்ததென்பது உறுதியாகின்றது. இதனால் சேன, குத்திக என்போர் இங் கிருந்த அநுராதபுர அரசின் மீது படை யெடுத்திருக்காலம் எனவும் கருத இட முண்டு அண்மையில் பேராசிரியர் ஆ. வே லுப்பிள்ளை அநுராதபுர அரசை 44 ஆண் டுகள் ஆட்சி செய்த ஈழராஜா என்பவனே பாளி மொழியில் 'எலரா' (எல்லாளன்) எனப்பட்டிருக்கலாம் என்கிறார். கி. பி. 1ம் நூற்றாண்டில் இளநாகன் என்பவன் தமிழர் படையுடன் வந்து அநுராதபுர அரசைக்கைப்பற்றியதாகக் கூறப்படுகின் றது.

இது ஈழநாகனாக இருக்கலாம். என் பது பேராசிரியர் சிவசாமியின் கருத்தாகும். இவனை மகாவம்சம் தமிழன் என்று கூறா விட்டாலும் இவன் மனைவியை தமிழ தேவி எனக் கூறுவதில் இருந்து இவனையும் ஒரு தமிழ் மன்னனாகக் கருத இடமுண்டு. வரலாற்றாசிரியர்கள் பலரும் கி. பி. 10, 11 ம் நூற்றாண்டிலே பொலநறுவையில் சோழரது 77 ஆண்டு கால ஆட்சி நிலவிய தனால் தமிழ் குடிகள் பெருகின என்றும், தமிழரது செல்வாக்கு அதிகரித்து வந்த தென்றும் கூறுகின்றனர். ஆனால் துட்ட காமினி எல்லாளன் போராட்டத்தை இனப் போராட்டமாகச் சித்தரிக்கும் மகாவம்சம் கிறிஸ்துவுக்கு முன்னர் 80 ஆண்டுகளுக்கு மேல் தமிழர் ஆட்சியிலிருந்ததாகக் கூறு கின்றது. இதற்குத் தமிழ் குடிகளின் செல் வாக்கு அக்கால கட்டத்தில் இங்கு மே லோங்கியிருந்ததே காரணமெனலாம். இது தமிழரின் பூர்வீக வரலாற்றை தமிழ்நாடு. அநுராதபுர அரசுகளின் தொடர்புகளின் பின்னணியில் நோக்காது தமிழ் பிராந்திய தொல்லியல் ஆய்வில் கண்டு கொள்ள வேண்டும். என்பதைக் கோடி காட்டுகின் றது.

## ஈழத்துப் பூதத்தேவனாரின் சொந்த இடம் எது?

இலங்கைத் தமிழ் இலக்கியம் சங்க காலத்திலிருந்து வளர்ந்து வருவதாகக் கொள்ளும் மரபு காணப்படுகின்றது. இதற் குப் சங்ககாலப் புலவர்கள் சிலர் ஈழத்த வராக இருந்ததே காரணமாகும். இவர் களுள் ஈழத்துப் பூதந்தேவனார் பெயர் பலராலும்ஏற்கப்பட்ட ஒன்றாகும். தமிழறி ஞர்களில் சிலர் இவரை ஈழத்தவராகக் கொள்ளத் தயங்கினாலும் அண்மைக் கால ஆராய்ச்சி முடிவுகள் இவர் ஈழத்தைச் சேர்ந்தவர் என்பதை உறுதிப்படுத்தியுள் ளன. ஆயினும் இவரின் சொந்த இடம் இலங்கையில் எவ்விடத்தில் இருந்திருக் கலாம் என்பதற்கு உறுதியான ஆதாரம் கிடைத்ததாகத் தெரியவில்லை. ஆனால் பூநகரியில் சங்ககாலத்தில் சமகாலமாக் கொள்ளக் கூடிய மட்பாண்டங்களில் ஈழத் தைக்குறிக்கும் ஈலா, ஈழ என்ற பெயர் கள் வருவதும் அங்கு இன்னும் ஈழஊர் என்ற கிராமம் இருந்து வருவதும் ஈழத் துப் பூதந்தேவனார் பூநகரியைப் பிறப்பிட மாகக் கொண்டிருக்கலாம் எனக் கருத இட மளிக்கின்றது.

சங்ககால நாகரீகம் பெருங்கற்காலப் பண்பாட்டின் பின்னணியில் தோன்றிய ஒன்றாகும். அத்தகைய ஒரு பண்பாடு பூநகரியிலும் ஈழஊர் அமைந்த பகுதியில் இருந்ததை நமது தொல்லியல் மேலாய்

வில் கண்டு பிடிக்க முடிந்ததோடு இலங்கையின் ஏனைய பாகங்களில் இதுவரை கிடைக்காத இப்பண்பாட்டிற்குரிய பல தனித்துவமான அம்சங்களும் இப்பிராந்தியங்களில் கிடைத்துள்ளன. இந்த அம்சங்கள் இப்பிரதேசத்திற்கு எதிரேயுள்ள பாண்டிநாட்டிலும் (ஆதிச்சநல்லூர்) அரிக்கமேடு போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளன. தொல்வரிவடிவயியலில் இலங்கைக்கும் தமிழ் நாட்டிற்குமிடையே கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்திலிருந்து நெருங்கிய ஒற்றுமை இருந்ததை பல அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதில் தமிழுக்குரிய நகரம், ஈகரம். மகரம் போன்ற எழுத்துக்கள் இலங்கையின் ஆதிப்பிராமிக் கல்வெட்டில் வருவது இங்கு தமிழ்மொழி உபயோகத்தில் இருந்தமைக்கான முக்கியமான ஆதாரமாகும். ஆயினும் இது வரை தமிழுக்குரிய அனைத்து பிராமி வரி வடிவங்களும் இங்கு கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை,

ஆனால் பூநகரியில் மேற்கூறப்பட்ட எழுத்துகளோடு முதன்முறையாக தமிழுக்கேயுரிய ழகரம், னகரம், றகரம் போன்ற வரிவடிவங்களும் கிடைத்துள்ளன. இது சங்க காலத்தையொத்த தமிழர் நாகரிகம் இப்பிராந்தியத்தில் இருந்ததை எடுத்துக்காட்டுவதோடு தமிழ்மொழி உபயோகம் இருந்ததென்பதையும் நிதர்சனமாக நிச்சயப்படுத்துகின்றது. இத்தகைய ஒரு பின்னணிதான் ஈழத்துப் பூதந்தேவனார் சங்க காலம் புலவர்களில் ஒருவராக விளங்கக் காரணமாக இருந்திருக்க வேண்டும். ஈழத்துப் பூதந்தேவனார் சில இடங்களில் மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் எனவும் அழைக்கப்பட்டுள்ளார். இதற்கு இவர் மதுரையில் நீண்ட காலம் தங்கி வாழ்ந்தமை காரணமாக இருக்கலாம்.

இலங்கையின் ஏனைய பாகங்களை விட பூநகரியை உள்ளடக்கிய தமிழ்ப் பிராந்தியம் மதுரைக்கு அருகே அமைந்துள்ளது. இதனால் ஈழத்துப் பூதந்தேவனார் அங்கு சென்று சங்க காலப் பாடல்களைப் பாடியிருக்கலாம் என்பது பேராசிரியர் வி. சிவசாமியின் கருத்து ஆகும். இலங்கையில் ஆதிகாலம் தொட்டு பல இந்து ஆலயங்கள் இருந்தும் நாயன்மார் பாடல்களில் திருக்கேதீஸ்வரமும் திருக்கோணேஸ்வரமும் இடம் பெற்றமைக்கு இவை தமிழ் நாட்டிற்கு அருகே இருப்பதுடன் பண்பாட்டால் ஒருமித்திருந்தமையும் காரணமாக இருக்காலம். இதே போல் தமிழ் நாட்டிற்கு கிட்டிய தூரத்தில் உள்ள பூநகரிப் பிராந்தியத்தில் ஈழம் என்ற பாரம்பரியப் பெயர் இருந்து வருவதும் ஆதிகாலத்தில் தமிழ் மொழி வழக்கிலே இருந்ததற்கான சான்றுகள் கண்டு பிடிக்கப்பட்டு இருப்பதும் ஈழத்துப் பூதந்தேவனாரின் சொந்த இடமாக பூநகரியை இடமளிக்கின்றது. □□□

---

''ஸ்டாலின்கிராட் நகரினைத் தாக்கிப் பிடித்திட, இருபது டிவிஷன் விமானங்களை உடனே அனுப்ப உத்தரவு பிறப்பிக்க வேண்டும்'' என்று கோயபிள்ஸ் கேட்டானாம். ஹிட்லரிடம்.

கடுங்கோபம் கொண்ட ஹிட்லர் ''என்ன இது? ஸ்டாலின்கிராட் பிடிபட்டதாகி விட்டது என்று சென்ற வாரம் நாம் வெற்றிவிழாக் கொண்டாட வில்லையா?'' என்று கேட்டானாம் 'ஆமாம்! அது பிரச்சாரத்துக்காக!'' என்று கோயபிள்ஸ் கூறிவிட்டுச் சிரித்தானாம்.

□ தியாகராசா □

# அரங்கத்தில் முடிவுறாத
## "உயிர்த்த மனிதரின் கூத்து"

ச. நகுலேஸ்வரன்

தேசிய ஒடுக்குமுறை பல்வேறுவழிகளிலும் ஸ்திரமாகிக் கொண்டு வரும்வேளையில் ஒடுக்கப்படும் மக்கள் தமது கலை பண்பாடு, நிலம் எல்லாவற்றிலும் இறுக்கமாகப் பிணைப்புறுவது வரலாற்று நியதி. ஒடுக்குமுறைக்கு எதிராகத் தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்புற்றிருக்கும் இக்காலகட்டத்தில், கலைஞர்கள், சிருஷ்கர்த்தாக்கள், சிந்தனையாளர்கள் கால வோட்டத்துடன் இணைந்து ஒரு புதிய எதிர்காலத்திற்கான, பண்பாட்டு விழிப்புணர்ச்சிக்கான கலைப்படைப்புக்களை படைக்கின்றார்கள்.

முத்தமிழ் விழா நாட்களிலும், அதற்கு முன்னைய எழுச்சி நாட்களிலும் இந்த மண்ணை நேசிக்கும் கலைஞர்கள் தந்த கலைப் படைப்புக்கள் மக்களை எழுச்சி கொள்ள வைத்துள்ளன. இதன் பிரதிபலிப்புக்களும், தாக்கங்களும் வீதி நாடகங்களாக, விடுதலைக் கீதங்களாக உச்சம் பெறுகின்றன. நிகழ்காலப் பயங்கரங்களுக்கெல்லாம் அஞ்சி ஒடுங்கி எதிர்காலத்தையே சூனியமாக்கி மரணத்துள் வாழும் மக்களை இப்புதிய கலைச்சூழல் உயிர்புறச் செய்துள்ளது.

முத்தமிழ் விழாவின் இறுதி நிகழ்ச்சியாக யாழ் அரங்கக் கல்லூரியினரது உயிர்த்த மனிதரின் கூத்து என்னும் நாடகம் இடம் பெற்றது. பாரம்பரிய செழுமைகளிலிருந்து பெற்றுப் புதுக்கிய நவீன கலைப் படைப்பாக இந்தநாடகம் மிளிர்கிறது. ஒரே வட்டத்திற்குள் சுற்றிச் சுழன்று கொண்டிருந்த கலைப்படைப்புக்கள் இன்று புதிய வடிவம் பெற்றுள்ளதும் அவை புதிய



வழிகளில் மக்களை ஆற்றுப்படுத்த முனைந் துள்ளதும் இந்நாடகப் படைப்பில் வெளிப் படுகிறது.

எமது தேசங்கண்ட வரலாற்று நிகழ்வு கள் பல இந் நாடகத்தில் நிகழ்த்திக் காட் டப்படுகிறது. சமகால தேசிய விடுதலைக் கான ஆயுதப் போராட்டத்தின்து பரிணாம வளர்ச்சியே படைப்பில் கருவாக உள்ளது. படைப்பாளியின் ஆழமான வரலாற்றுப் பார்வையும் பரந்த சமகால நோக்கும் இப் படைப்பில் புலப்படுகிறது. இன்று தமிழ் மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் வரலாற்று ணர்வை இப் படைப்பு மேலும் வேகங் கொள்ள வைக்கிறது.

இயக்கர், நாகர் ஆகிய இரு இனங் களும் நாகரிகமுள்ள தொன்மைக் குடிகளாக வாழ்ந்த காலம் இப் படைப்பின் ஆரம்ப மாயமைகிறது. இரு இனங்களும் முன்னோர் புதைத்து வைத்த புதையல் பெட்டி ஒன் றினை தேடுவதில் மும்முரமாக முனைந்து நிற்கின்றனர்.

புதையல் பெட்டியும் கிடைத்து விடுகிறது. எல்லோருமாக இணைந்து தேடி யதைப் பலமிக்க ஒருவன் தனதாக்கிக் கொள்கிறான். ஏனையோரை அவன் அடி மையாக்கி விடுகிறான். அவன் தரும் அற்ப சொற்பசலுகைகளுக்கு ஆள்பட்டு அனு சரணையாயிருப்பதும் குழுக்களாக மோது வதுமே படைப்பின் உயிரோட்டமாயமை கிறது.

சிங்கள தேசிய உயர் குழாத்தினரும், தமிழ் தேசிய உயர் குழாத்தினரும் இன ஐக்கியம் என்ற போர்வையில் ஒன்றியிருந் தமையும், பெரும்பான்மை இனப் பலத்து டன் சிங்கள தேசிய உயர் குடிப்பிறந்தோர் கள் ஆளும் வர்க்கமாக மேற்கிளம்பியதை யும் ஆரம்பகாட்சி உணர்த்துகிறது.

இரு உயர் குழாத்தினரும் சுதந்திரத் திற்காக ஒன்றி நின்று உழைத்ததை இசை யுடன் கூடிய எள்ளல் நிறைந்த பாடல் களும் அசைவுகளும் கலையழகுடன் வெளி படுத்துகிறன.

''திரவியப்பெட்டக செல்வ வேட்கையால்
முக்கி முக்கியே முயலுகிறார்கள்
முக்கியமான நற்பணி இதுவென
முக்கி முக்கியே முயலுகிறார்கள்.''

இரு இனங்களுக்கிடையே முற்றி நிற் கும் முரண்பாடுகள், பகைமையை நிரந் தரமாக்கிவிடும் இனவெறியூட்டும் பௌத்த

வரலாற்றில் நெருக்கடியான சூழல்களிளெல்லாம் ''வீதி நாடக இயக்கம்'' எல்லா நாடுகளிலும் தலையெடுக்க ஆரம்பித்தன. ஸ்பெயினில் உள்நாட்டுப்போர் மூண்டபோது, ஜப்பரனிய, பிரெஞ்சு, மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் ஆக்கிரமிப்பை எதிர்த்து வியட்னாமிய மக்கள் 45 ஆண்டுகால நெடியபோராட் டத்தை நடத்திய போது, கியூபாவில் புரட்சி நிகழ்ந்ததற்குப் பிறகு, லத்தீன்அமெ ரிக்க நாடுகளில், ஆபிரிக்க நாடுகளில் காலனியாதிக்கத்திற்கு எதிராக தேச விடுதலைப்போர் மூண்ட போது, இத்தகைய சூழல்களிலெல்லாம் ''வீதி நாடகங் கள்'' உயர்வேகத்தில் மேலெழுந்தன.

☐ சப்தர் ஹாஷ்மி ☐

மத போதனைகள், வலுப்பெற்றுவிட்ட இனக்குரோதங்களால் எழுந்த கலவரங்கள், தேசிய ஒடுக்குமுறையின் இராணுவப் பயங்கரவாதம் இவற்றுடன் இரத்தஞ் சிந்தும் அரசியலே நாடகத்தின் பிரதான கூறாக அமைகிறது. இந்த வகையில் இவைதரும் சேதிகள் கிளர்த்தும் அனுபவங்கள் தொற்ற வைக்கும் உணர்வுகள் முற்றிலும் புதிய வாழ்நிலையை கொண்டுவருகின்றன.

ஆளவந்தாரிடம் கொடி, குடை, ஆலவட்டம் போன்றவற்றைப் பெற்றுக் கொண்டு குழுக்களாகப் பிரிந்து நின்று பாடுவதும், ஆர்ப்பரித்து ஆடுவதும், மோதிக் கொள்வதும் தேர்தல் கால போலித்தனமான வாக்குறுதிகளையும் ஆர்ப்பாட்டங்களையும் எம் மனதில் நிறுத்தி எம்மை மீள் விசாரணைக்குற் படுத்துவதாயமைகிறது.

வட்டமேசைமகாநாடு, சர்வகட்சிமகாநாடு, பேச்சுவார்த்தை கலந்துரையாடல் இவைகள் தான் எமது சுயநிர்ணய உரிமையைப் பெற்றுத்தரும் என்ற நீண்ட கால நம்பிக்கைகள் உடைத்து நொருக்கப்படுகிறன.

- வெற்று ஒப்பந்தங்களும் பேச்சுவார்த்தைகளும் என்றைக்குமே எமது சுயநிர்ணய உரிமையைப் பெற்றுத்தராது, என்ற கசந்துபோன அரசியல் வரலாற்றின் தர்க்க ரீதியான வளர்ச்சியிலும்,

- எதையுமே இழக்காமல் எல்லாவற்றையுமே பெறலாம் என்ற கொள்கை கொண்ட மிதவாதத் தமிழ் தலைமைகளில் ஏற்பட்ட அவநம்பிக்கையாலும்

- வளமிகுந்த எமது விளைநிலங்களையும், வாழ் விடங்களையும் வளங்கள் நிறைந்த நீர்ப்பரப்பையும் பேரின வாதிகள் அபகரிப்பதைப் பொறுக்கமாட்டாமலும்,

இளைஞர்கள் வெகுண்டெழுந்து ஆயுதம் ஏந்தத் தலைப்படுகிறார்கள். சயந்தன் என்னும் இளைஞன் பாத்திரம் இளைய தலைமுறையைக் குறித்து நிற்கிறது. இளைய தலைமுறையின் எழுச்சி இளைஞன் பாத்திரத்துக்கூடாக சித்திரிக்கப்படுகிறது. அரையிலுள்ள மேல்துண்டை உருவித் தோளிலும், இடுப்பிலும் வரிந்துகொள்வது துப்பாக்கியையும், இரவைக்கூட்டையும் ஏந்துவதை குறியிட்டு காட்டுகின்றது. இந்த இடத்தில் கலைஞர் பார்ப்போரையும் எழுச்சி கொள்ள வைத்துவிடுகிறார்.

அரங்கில் விரிந்து கிடக்கும் நீண்ட செந்நிறத்துணி ஒரு பக்கத்தில் நிற்கும் குழுவால் மெல்ல மெல்ல இழுக்கப்படுகிறது. சிங்கள அரசுகளின் திட்டமிட்ட மண் அபகரிப்புஉருவகப்படுத்தப்படுகிறது. கடந்த கால மிதவாத அரசியல் போராட்டங்களும் பேசுவம், பொறுப்பம் போன்ற அரசியல் இழுபறிகளும் உரையாடல்களால் உணர்த்தப்படுகிறது. இப் போக்குகளில் அதிருப்தி கொண்டு இளைஞன் மறுமுனையைப் பிடித்து இழுக்கிறான்.

> "வாருங்கள் எல்லோரும் இழுப்பம்
> சேர்ந்து இழுப்பம்"

இந்த மண்ணில் மேல் உண்மையான பற்றுள்ள மக்கள் அனைவரையும் இந்த மண் மீட்புப் போரில் இணையுங்கள் என அறைகூவல் விடுகின்றான்.

நுணுக்கமான உருவக உத்திகள், குறியீடுகள் காட்சிகளில் படியவேண்டிய இடங்களில் சிறப்பாக படிந்திருப்பதும். அனலுமிழும் பாடல்கள், கருத்தாழங் கொண்ட உரையாடல்கள், அசைவுகளுடனும், பாடல்களுடனும் இணைந்து வரும் பின்னணி இசை ஆகியவற்றால் நாடகம் பொலிவுறுகிறது அரங்கினது முழுவளங்களையும் அறிந்து கலைஞர்கள் நாடகத்தின் வெற்றிக்காக பணியாற்றியுள்ளார்கள்.

சினிமா கமராக்களுக்கு மட்டுமே, இலகுவான, உருவக உத்திகள் கூடமிக கடினமான, பயிற்சிகள், அப்பியாசங்களுடன் நீண்ட மெல்லசைவு(ஸ்லோமோசன்) நீண்ட மிகவேகமான அசைவு (பாஸ்ற்மோசன்) நாடகத்தில் கையாளப்பட்டுள்ளது. இந்த காட்சிகளிலெல்லாம் அசைவுகளையும் இசையையும் எப்படி இணைப்பது என்பதை நன்குணர்ந்து இசையமைப்பாளரும் நெறியாளரும் செயற்பட்டுள்ளதும். அவற்றில் பல அர்த்தங்கள் தொக்கி நிற்பதும் நாடகத்தின் சிறப்பம்சமாகவுள்ளது.

இத்தகைய நுணுக்கங்கள் மூலம் சொல்லவரும் விசயங்களை மிக திறனாக சொல்ல முயன்றிருப்பதும் அவதானிப்புக்குரியதாகும். இந்த நாடகத்தில் அனைத்து கலைஞர்களும் மெய்ப்பாடுகளை வெளிப்படுத்துவதோடு மட்டும் நின்றுவிடாமல் மெய் வருந்தி உழைத்துமிருக்கிறார்கள்.

நாடகத்தின் ஆரம்பகாட்சியில் கலைஞர்கள் நீண்ட மெல்லசைவில் (ஸ்லோமோசன்) ''எனக்கே அனைத்துமடா''! எனமோதிக் கொள்வது. வர்க்கங்களாக, இனங்களாக மக்கள் முரண்படுவதும் மோதிக் கொள்வதும் காலங் காலமாக நீண்டு கொண்டேயிருக்கிறது என்பதை உணர்த்துகிறது. பின்னணியில் ''கோரஸ்'' முறையில் பாடல் ஒலிக்கின்றது.

''அநியாயப் படைகள் இருளில் மோதும்
ஒரு பெருங் களத்தில் உள்ளோம் நாங்களே
நாங்கள் யாரென்று உனக்குத் தெரியாது
நீங்கள் யாரென்றும் எனக்குத் தெரியாது.
நாங்கள் யாரென்றால் எனக்கும் தெரியாது
நீங்கள் யாரென்றால் உனக்கும் தெரியாது
அநியாய............
ஒரு பெரும்............
ஆ.........ஆ...... ..ஆ.........''

ஏன் இந்த முரண்கள், மோதல்கள் மனிதன் தனக்குள் காரணம், தேடுவதும், காண முடியாமல் மற்றவரிடம் காரணத்தை தேட முயல்வதும். புதிர்கள் விடுபடாமல் மோதல்கள் தொடருவதும், மனிதன், மனிதனையேயுணர முடியாத ''மனிதம்'' மரணித்து விட்ட ஒரு சவவாழ்க்கையை சுமக்கின்றான் என்பதையும் இந்தப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

குண்டுவீச்சு விமானங்களின் அதிர்வுகளையும், பீரங்கி முழக்கங்களையும் பறைசாற்றும் பின்னணி இசையுடன், அரங்கின் ஒரு அந்தத்திலிருந்து மறு அந்தம் வரையான கலைஞர்களின் மெல்லசைவு இராணுவ பயங்கரங்களை விசாரப்படுத்தும் முக அங்கிகள் கூரிய நகங்கள், இராணுவ அழுத்தங்களை சித்திரிக்கும் நீண்ட காலுறைகள் அந்நியநாட்டுப் படைகள் எங்கள் தமிழீழப் பிரதேசமெங்கும் கால் பதித்து விளைவித்த அனர்த்தங்களை சித்திரிக்கிறது.

இராணுவக் கொடூரங்கள் இந்த மண்ணில் இன்னும் இன்னும் வேகங் கொள்வதும், இளையவர்கள், முதியவர்கள், ஆண்கள் பெண்கள் என வேறுபாடின்றியே உயிர்களனைத்தையுமே இந்த மண்ணுடன் அரைத்துக் கூளாக்கி விடத் துடிக்கும் வேகம் கலைஞர்களினது நீண்டமிக வேகமான அசைவுகள் மூலம் உருவகப்படுத்தப்படுகிறது. இக்காட்சியில் பீரங்கிகளின் அதிர்வுகளையும், குண்டுவீச்சு விமானங்களின் பேரிரைச்சலையும் குறிக்கும் பின்னணி இசையுடன் இணைந்த பாடல் நிகழ்காலம் பயங்கரங்களனைத்தையும் வெளிப்படுத்துகிறது.

நீண்ட தெருக்கள் குழிந்து கிடந்தன
நேற்று நின்ற — நேற்று நின்ற

தூண்கள் உடைந்து விழுந்து கிடந்தன
துண்டு துண்டாய் — துண்டாய்
ஆண்பிள்ளை பெண்பிள்ளை என்ற பேதம்
அனைத்துமின்றி — அனைத்துமின்றி
வீண்பண்டமாக மனிதர் உடல்கள்
விழுந்தனவே — விழுந்தனவே.''

அநீதி, துயரம், அறிவும், நியாயமுங் கூடச் சுமந்து கொள்ள முடியாத அளவிற்கு படுகொலைகளை இந்த மண்ணில் நாங்கள் சந்திக்கின்றோம். எவரிடம் முறையிடுவது, யாரிடம் நீதி கேட்பது என மக்கள் அரற்றி அழுது புலம்புகிறார்கள். சொல்லிமாழாத துன்பத்தை சுமந்து வெந்து நோகின்றார்கள்.

'கால் இழந்தோம் கை இழந்தோம்
கண் இழந்தோம பெண் இழந்தோம்
நூல் இழந்தோம் படிப்பிழந்தோம்
ஆள் இழந்தோம் அணி இழந்தோம்
அடுப்பிழந்தோம் நெருப்பிழந்தோம்
தோள் இழந்தோம் தொழில் இழந்தோம்
தொய்ந்துநொந்தோம்வெந்துநைந்தோம்''

இத்துணைப் பயங்கரங்களுக்கும் மத்தியிலும், அடக்குமுறைசளையும் உடைத்தெறிய கங்கணங்கட்டி நம்முள்ளேயே ஒரு கூட்டம் முனைந்திருப்பதும், அந்த வேங்கைக் கூட்டங்கள் எழுப்பும்சங்கநாதம்அஞ்சி ஒடுங்கித் துஞ்சிமடியும் இந்த மக்கள் கூட்டத்தையும் உயிர்பித்து தம்முடன் நிமிரச் செய்து விடுகிறது.

''அடக்குமுறைகளை ஒடித்து நாம் வீசுவோம்
ஒடுக்கும் விதிகளை உடைத்து நாம் ஊதுவோம்
கெடுக்க நினைக்கும் உன் கொடுக்குகளை நறுக்குவோம்
உயிர்த்தவர்கள் நாமெல்லோரும்
உலகத் தாய் வயிற்று மைந்தர்
நசிந்து இனிக் கிடக்க மாட்டோம்
நாம் எல்லாம் நிமிர்ந்து நிற்போம்''

இந்த நாடகத்தின் வெற்றிக்கான காரணங்களை மனத்தில் நிறுத்தில் சிந்திக்கும் பொழுது, மிக எளிமையான உரையாடல்கள், இசைப்பாடல்கள் கலைஞர்களுக்கும் பார்வையாளருக்குமிடையேயான கருத்துப் பரிமாறலுக்கான நுணுக்கமான அரங்க உத்திகள். அனைத்துக் கலைஞர்களினதும் பணிகள் அனைத்துமே நாடகத்தின் கவர்ச்சிக்குத் தவிர்க்கமுடியாதவையாயுள்ளன. இந்த நாடகத்தை பார்த்ததும் தலைசிறந்த நாடகப் படைப்பாளரான பிறெக்ற் பற்றிய விமர்சன வரிகள் சில நினைவில் வருகின்றது.

''மனிதவாழ்வின் அபத்த நிலைக்கும் மலட்டுத் தன்மைக்கும்
மத்தியில், நலன் வளரவும் இடமுண்டு என்ற
நம்பிக்கை உடையவர்களின் பக்கத்தில் நின்று ஊக்கமூட்டுகிறார் ''இயலும்'' என்ற இரவிலிருந்து
''நிஜமாகி விட்டது'' என்ற வடிவை நோக்கி
செல்வோருக்கும் புதிய காட்சியைப் பற்றிப்
பேசும் இலட்சியவாதி அவர்'' □□

*பதட்டம் மிக்க போர்க்காலத்தின் போது சோவியத் நாடகத்துறையினர் வியக்கத் தக்க அளவில் ஐந்து லட்சத்துக்கும் அதிகமான முறை வீதிநாடகங்களை அரங்கேற்றினர். காடுகள், போர்முகாம்கள், பதுங்குகுழிகள், ராணுவலாரிகள், போர்க்கப்பல்கள், மருத்துவமனைகள், குண்டு வீச்சால் சேதமடைந்த கட்டிடங்கள் இவற்றில் எல்லாம் வீதி நாடகங்கள் நிகழ்த்தப்பட்டன,*

□ சப்தர்ஹாஷ்மி □

''இளையதலைமுறை இந்தப் போராட்டத்தை ஏந்தி நிற்கவேண்டும். அப்படி ஏந்தி நிற்பதற்கு எமது போராட்டத்தின் அத்திவாரமும், அத்திவாரத்திற்கான அடிக்கற்களைப் பற்றிய அறிவும் இருக்கவேண்டும். அப்படி இல்லாத இடத்தில் எமது போராட்டம் விற்கப்படும் ஆபத்துக்கூட ஏற்படலாம்''

☐ கலைஞர்கள், இலக்கியவாதிகள் சந்திப்பின்போது.

தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் கருத்துக்கள் இரண்டு.

## "நெருப்பு"

### முருகையன்

''பல்லாண்டு பாடுகிறோம் தமிழ் அன்னைக்கு,
பாண்டியரே சேரர்களே, சோழர் மாரே
எல்லாரும் வாருங்கள்;
இந்த நாட்டின்
இளமை பயில் தமிழ்த் திரளே! வருக'' என்று
பொல்லாத இனப்பகையை எதிர்ப்பதற்குப்
போர் முரசு கொட்டினோம் — அந்தக் காலம்
எல்லாளன் வழிவந்தோர்
புலிபோற் சீறி
எழுச்சி கொண்டார் —
புது நிலைமை — இந்தக் காலம்
இந்து சமுத்திரத்துக்கும் அப்பால் நின்றே
எவனேனும் கை கொடுப்பான் என்று நம்பும்
சிந்தனையை ஒழித்து விட்டோம்
ஆதலாலே —
திடமான தன்வலிமைத் துணிவு கொண்டோம்
சொந்தத்தில் சிந்தித்தோம்,
திட்டம் தீட்டிச்
சுடர் கொளுத்தி நெஞ்சகத்தில் விளக்கு வைத்தோம்
நொந்தற்றுப் போக இனி ஒப்பமாட்டோம்
நூராத ஒளி விளக்கைக் காத்து வாழ்வோம்.
வால் பிடிக்கும் பழம் போக்கை விட்டுவிட்டோம்
வளைந்து நின்று தயங்குவதை நிறுத்தி விட்டோம்
பால் குடிக்கும் குழந்தைகளா தமிழர்?



"முழுப்பட்டினியாகக் கிடப்பவனிலும் பார்க்க அரைப் பட்டினியாகக் கிடப்பவனின் குரலே அதிகமாகக் கேட்கும். அதுபோல் எமது மக்களிலும் அடிப்படை வசதியில்லாதவனின் குரல் ஆட்சியாளரைச் சென்றடைவதிலும் பார்க்க நடுத்தர வசதியாளரின் தேவைக்கான குரலே அதிகம் சென்றடைகிறது"

☐ போராளிகளுக்கான அரசியல் பயிற்சி வகுப்பின் போது.

இல்லை!
பயிற்சி பெற இளைஞர்களைப் பெற்றுத் தந்து
வேல் பிடிக்கும் பழமரபின் வீரப் பண்பை
விருத்தி செய்து வருகின்ற விருப்பம் உள்ளோர்
கால் பிடித்துக் கை பிடித்துக் கெஞ்சி வாழும்
கடை கெட்ட பேதைமையை ஒப்ப மாட்டோம்.
பண்பாட்டில் தனித்தன்மை உடைய நாங்கள்
பாட்டுகளில், கூத்துகளில், இசையில் எல்லாம்,
கொண்டாடத் தக்க வளம் உடைய நாங்கள்,
கோயில்களும் கலை நெறியும் உடைய நாங்கள்,
திண்டாடித் தெருக்களிலே அகதியாகித்
தியங்கி நின்று தத்தளித்துச் சிதையலாமோ?
கண் மூடிக் கிடப்பதில்லை.
உயிர்த்து வந்து
கயமைகளைச் சுட்டெரிப்போம் — சுடலை நீறாய்!
நெஞ்சகத்தில் மூண்டு வந்த உணர்ச்சி என்ற
நெருப்பெடுத்து விளக்கேற்றி ஒளிர்வு பெற்று,
சஞ்சலத்தை,
சதிகாரர் பூட்ட எண்ணும் சங்கிலியை,
அறுப்பதற்குக் கருவி காண்போம்
பஞ்சுமலை தீப்பற்றி எரிதல் போலே
பழங்கால அறியாமை அழிந்து போக,
வெஞ்சமரில் அறம், நீதி வெல்லக் காண்போம்
விடாமுயற்சிக் கடுந்தவத்தால் வெற்றி காண்போம்



15 - 9 - 1990

நேற்றைய இரவு முழுவதும் கடும்வேலை தூக்கமில்லை. ஓய்வாகத்தானும் இருக்கமுடியவில்லை. ஆனால் இந்த நேரத்தில் இவையல்ல பிரதானம் இந்தச் சனங்களுக்கு எதைச் சொல்லி எப்படி விளங்க வைப்பது என்பது தான் புரியவில்லை என்பதே பெரும் கவலையாக இருக்கிறது.

இன்று அதிகாலை 6 மணியிருக்கும். நீர்த்தடாகத்தின் மேல் பச்சைக் கம்பளம் விரித்தது போல் இருக்கும் ஆரியகுளம். ஆங்காங்கே அழகாக மலர்ந்திருக்கும் பூக்கள். இவை தாமரைகளா அல்லிப்பூக்களா வடிவாக கவனிக்கவில்லை. சன நடமாட்டமற்ற சுடுகாடு போல ஸ்ரான்லி வீதியும், பலாலி வீதியும் சந்திக்கும் ஆரியகுளம் சந்தி. மண்டைதீவிலிருந்து இராணுவம் கோட்டை நோக்கி நகர எத்தனிப்பு, பதின்மூன்று புலிகள் வீரமரணம். பத்திரிகைகளில் தலைப்புச் செய்தி இருப்பதாக அருகில் இருந்த சுரேன் சொன்னான். அதிருக்கட்டும் பிறகு பார்க்கலாம் எனக் கூறியபடி தோளில் தொங்கிய ஏ கே யினைஒருமுறை தடவிக் கொண்டேன். இந்தச் சந்தியைக் கடந்து சாதாரணமாக நகருக்குள் இப்போ யாரும் வரமாட்டார்கள். எதற்கும் ஒரு கயிற்றைக் கட்டித் தடுத்து வைப்போம். வீதிப்போக்குவரத்து முடப்பட்டுள்ளது என மட்டையில் எழுதி, தொங்க விடுவோம் எனச் சுரேனிடம் சொல்லியபடி எழுந்து சென்றேன்.

— இளையவன் —

"ஒரு நாள் குறிப்பு"

அறுபத்தைந்து வயது மதிக்கத்தக்க பெரியவர் ஒருவர் வெள்ளை வேட்டியும் கைமடித்த சேட்டுமாய் சைக்கிளில் பலாலிவீதிவழியே வருவது தெரிந்தது. 'இந்தப் பாதையால் போக முடியாது திரும்பிப் போங்கள்' என சைகை மூலம் காட்டுகிறேன். அவர் கவனிப்பதாகத் தெரியவில்லை கிட்ட வரட்டும் சொல்லி திருப்பி அனுப்புவோம் என நினைத்துக்கொண்டு கயிற்றை எடுத்து வீதிக்குக் குறுக்காகக் கட்டுப் பணியை விரைவுபடுத்தினேன்.

கயிற்றுக்குச் சமீபமாக வந்துவிட்ட பெரியவர் கடந்து செல்ல முற்பட்டார்.

''ஐயா! இந்தப்பக்கம் போக முடியாது திரும்பிப் போங்கோ'' என்றேன் நான்

''இல்லை தம்பி என்ரை வீடு இதில ஸ்ரேசனுக்குப் பக்கத்தில இருக்கு போய்ப் பார்க்க வேணும்'' என்றார் பெரியவர்.

''வீட்டில ஆரும் ஆக்கள் இருக்கினமா ஐயா''

''என்ன தம்பி, இந்தச் சண்டைக்குள்ள இவ்வளவு ஷெல் அடிக்குள்ளயும், பிளேன் அடிக்குள்ளயும் என்னண்டு தம்பி இருக்கிறது, ஒருதரும் இல்லை அதுதான் ஒருக்காப் போய் பாக்க வேணும்''



எனக்குள் ஒரு வகை கோபம் ஊற்றெடுக்கிறது. இவ்வளவுக்கும் மத்தியில் தானே நாங்களும் நிற்கிறம்

''இதுக்கு இந்தப் பக்கம் ஒருத்தரையும் விட வேண்டாம் எண்டு சொல்லி இருக்கு நீங்கள் திரும்பிப் போறது நல்லது'' என பதிலளித்தேன்.

''என்ன தம்பி நீ! என்ரை வீட்ட நான் போறன் நீ விடமாட்டன் எண்டு சொன்னா என்ன நியாயம் தம்பி'' என்றார் பெரியவர்.

''ஐயா பெரியவரே! காலங்காத்தால கோவத்தை கிளறவேண்டாம், பேப்பர் எல்லாம் பாத்தனீங்களோ? விசயம் தெரியாமல் கதைக்க வேண்டாம் திரும்பிப் போங்கோ''

''தம்பி கோபப்படாதையடா ராசா ஆக்கள் ஒருதரும் வீட்டில இல்லை அவசரத்தில் வெளிக்கிட்டு ஓடினது தானே சாமான் ஒண்டும் எடுக்கேல்ல ஆரும் கள்ளர் இள்ளர் வந்தாங்களோ வீட்டிலஷெல் விழுந்துச்சோ தெரியாது, அது தான் ஒருக்கா எட்டிப் பார்த்துட்டு வாறன்''

''ஐயா பெரியவரே! போகேலாது எண்டால் போகேலாது தான் திரும்பிப் போங்கோ''

''என்ன ஒரு மாதிரி கதைக்கிறீர், நான் போகத் தான் போறன் நீர் செய்கிறதை செய்யும்'' விறைப்பாக கூறியபடி பெரியவர் கயிற்றைக் கடக்க முற்பட்டார்.

''நான் சொல்லுறதை சொல்லிப்போட்டன் எல்லா இடத்திலயும் கண்ணிவெடி நல்லாய்போய் வெடிகளிலை விழுந்து சாவுங்கோ தூக்கவும் வரமாட்டம்'' என்று கூறியபடி நடந்து சென்று மரத்தின் பின்னாலிருந்த கதிரையில் குந்தினேன். பெட்டிப் பாம்பாய் சுருண்டார் பெரியவர்.

''தம்பி தம்பி தெரியாமல் கதைச்சுப் போட்டன் மன்னிச்சுக் கொள் வீட்டில கிடக்கிற சாமானுகளை ஒழுங்கா ஏத்தினா நல்லது அதுக்கு என்ன செய்யலாம் ஏதும் வழியிருக்கே. சொல்லு தம்பி''

''அதுகளை மேலிடத்தில போய்க் கதையுங்கோ'' வெட்டெனப் பதில் சொன்

னேன். பெரியவர் சைக்கிளை எடுத்துக் கொண்டு திரும்பினார். எனக்குள் ஒரு சிரிப்புடனான சிந்தனை வேரோடியது.

□ □ □

நேரம் 8-30 காலைச் சாப்பாடு இன்னமும் வந்து சேரவில்லை. பேசுக்குப் போய்ப் பார்த்து வரும்படி உத்தரவு வந்தது. சைக்கிளை எடுத்துக் கொண்டு கொண்டு விரைகின்றேன். வானத்தில் ஹெலிகொப்டரும் பொம்மரும் இரைச்சல் இட்டபடி காறி உமிழ்கின்றன குண்டுகளை. மாத்தின் மறைவில் பதுங்கி, வேலியோரங்களில் ஒதுங்கியும் எனது பயணம் தொடருகின்றது.

சுமார் ஒருமணி நேரம் கழிந்திருக்கும் வானத்தில் வட்டமிட்ட படையினரின் விமானங்கள் திரும்பிச் செல்ல வானம் வெளிக்கின்றது. கறையான் புற்றிலிருந்து ஈசல்கள் போல் மனிதத் தலைகளின் நடமாட்டம். பரமேஸ்வராச்சந்தியில் குண்டடிபட்ட கிடங்கில் சைக்கிள் விழுந்தெழவும் காற்று போய் விட்டது. சைக்கிள் கடைக்குப்போய் 'பம்ப்' எடுத்து அடித்தேன். காற்று நிற்க மறுத்தது. கடைக்காரர் என் அவசரத்தைப் புரிந்தாலோ என்னவோ உடனடியாகசைக்கிளை கழற்றி ஒட்டும் பணியில் இறங்கினார்.

மணிக்கூட்டை திருப்பிப் பார்த்தேன் 10-15 ஐ நெருங்கி கொண்டிருந்தது. வானம் வெறிச்சென்றிருந்தது. முன்னாலிருந்த தேநீர் கடையிலிருந்து ''உலகத் தமிழினமே எண்ணிப்பார்'' என்ற தேனிசைக்குரல் காற்றில் கலந்து கொண்டிருந்தது.

''மண்டைதீவு ஆமி வெளிக்கிட்டு வந்தவனாம் ராத்திரி முழுக்க கடும் சண்டையாம். கோட்டையில இருக்கிறவனும் வெளிக்கிடப் பார்க்கிறானாம். பெடியளும் அடிபடுறாங்கள் தான் எண்டாலும் தெரியாதே கொஞ்சம் கஸ்ரம் தான் ஆரியகுளத்துக்கு அங்கால போக விடுகினமில்லை எல்லா இடமும் கண்ணிவெடி தாட்டு வைச்சிருக்காம்.'' எனக் கதைத்தபடி சைக்கிளில் இருவர் கடந்து சென்றனர். என் சைக்கிள் பூட்டப்பட்டதும் 'பம்மை' எடுத்து காற்றை நிரப்பிக் கொண்டு விரைகின்றேன்.

காலைச் சாப்பாடு வந்து சேர்ந்து விட்டது. ஆனந்தபாபுவின் பொயின்றுக்கு ஏழு பார்சல், றெஜினோல்டின் பொயின்றுக்கு 150 பார்சல் என்றவாறாக பார்சல்களைப் பிரித்து ஒவ்வொரு பொயின்றுக்கும் அனுப்பி வைத்து விட்டேன் எனக்கும் ஒரு பார்சலை எடுத்துக் கொண்டு மரத்தடியிலிருந்த கதிரையில் போய் குந்தினேன். மணி 11 ஐ நெருங்கிக் கொண்டிருந்தது.

□ □ □

ஸ்ரேசனுக்குப் பின் பக்கத்தில் ஸ்ரான்லி வீதி வழியாக இரண்டு மூன்று சைக்கிள்கள் வருவது தெரிந்தது.

''அண்ணை பொம்மர் ஹெலியைச் சமாளிச்சு திருப்பி அனுப்பிப் போடலாம் இந்தச் சனங்களைச் சமாளிக்க ஏலாது'' என்று கூறியபடி எழுந்து கூடவந்தான் சுரேன்.

''ஏன் அப்பிடிச் சொல்லுறாய் சனங்களை நாங்கள் ஒருநாளும் வெறுக்கப் படாது'' ஆலோசனை கூறினேன்.

''காலமை உங்களோடை கதைச்சுப் போட்டு திரும்பிப் போன பெரியவர் நீங்கள் போய் கொஞ்ச நேரத்தில் ஒரு பார்சலோடை திரும்பி வந்தார். என்ன பெரியவர் எண்டு அன்பாய் விசாரிக்கப் போனா அவர் சொண்டு வந்த சாப்பாட்டுப் பார்சலை

நாய்க்கு வைச்சிட்டு வீட்டில எலுமிச்ச மரத்தில ஒரு ஐஞ்சாறு பழமும் பிடுங்கித் தரட்டுமாம், இல்லாட்டி தன்னை போக விட்டுமாம். எண்டு பெரிய கரைச்சல் நான் சொல்லிப் பார்த்தன் கேக்கேல்லை என்றான்

''பிறகு என்ன தான் சொன்னாய்? எப்படி சமாளித்தாய்?'' என்றேன்

''அது பெரிய கதை முழுக்க சொல்ல இப்ப நேரமில்லை ஆனா எனக்கு வந்த கோபத்திலை நாங்களோ உங்களை வீட்டை விட்டுப் போகச் சொன்னது என்று பேசினேன். தான் எங்கடை மேலிடத்தில கதைக்கப் போறன் எண்டிட்டு போட்டார்'' எனச் சொன்னான். அதுவும் நல்ல பதில்தான் எனக்குள் எண்ண அலைகள் ஓடியது.

இருந்தாற் போல ஓரிரண்டு துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்படுவதும் பின்னர் போவதாய் சத்தங்கள் உணர்த்தும். இடையிடையே காதைப் பிளக்கும் வண்ணம் விண் கூவியபடி ஷெல்கள் தலைக்கு மேலால் கடந்து சென்று எங்கோ போய் இடியோசையென வெடிக்கும். துப்பாக்கியை ஒற்றைக் கையால் உயரத் தூக்கி நிதானமாய் பலத்தைப் பரீட்சித்துப் பார்த்தேன்.

ஸ்ரான்லி வீதியால் வந்தவர்கள். 'ரவுசர் சேட்' போட்டவர்கள், என்னிலும் பார்க்க ஓரிரு வயது கூட இருக்கலாம். வந்ததும் வராததுமாக,

''ஏன் உந்தப் பக்கம் ஆக்களை விடுகிறீர்களில்லை'' என்றான் ஒருவன் அதற்குப் பதில் கூறுவதற்கு முன்பே மற்றொருவன்

''கோட்டையால ஆமி வெளிக்கிட்டினமாம் உண்மையோ?'' கேள்வியில் ஒரு கிண்டல்

'' கோட்டையிலிருந்து எவ்வளவு தூரத்திலை உங்கடை ஆக்கள் நிக்கினம்'' முதலாமவர் மீண்டும் கேட்டார். எனக்கோ எரிச்சல் மேலிட்டது.

''உமக்கும் எனக்குமுள்ள இடைவெளி தான் கோட்டையில ஆமிக்கும் எங்களுக்கும் இடையில் இருக்கு எனப் பதிலளித்தேன் சண்டை நிலவரம் பற்றி புதினம் கேட்க வெளிக்கிட்டிருக்கினம் அதைப் போய் பேப்பரில பார்க்க வேண்டியது தானே இங்கை என்னத்துக்கு வருவான் என என் மனம் எண்ணிக் கொண்டது.

''இப்படித் திரியிற வேளை உருப்படியா என்னவாவது செய்யலாம் தானே' என உதடு அசைந்தது.

'நாங்கள் செய்யிறத்துக்குத்தான் என்னஇருக்கு' என்றான் அவர்களிலொருவன்.

இதுகளோடை கதைச்சுப் பிரயோசனமில்லை என்ற முடிவுடன் ''இதால போகேலாது, திரும்பிப் போங்கோ'' என்றபடிநான் எழுந்து உலாவத் தொடங்கினேன்.

சிறிது நேரத்தில் மாட்டு வண்டியொன்று கடாமுடா வென்று சப்தமெழுப்பியபடி எம்மை நோக்கி வந்து கொண்டிருந்தது. குஞ்சண்ணை தான் வண்டிலைக் கொண்டு வாறார் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

''மத்தியானச்சாப்பாடு வருகிறது'' என சுரேனைக் கூப்பிட்டுச் சொன்னேன். அவனும் காலைச் சாப்பாடு பிரிக்கப்பட்டதை எடுக்க விரைந்தான்.

குஞ்சண்ணை வண்டில மரத்துக்குக் கீழாக மறைவில் நிறுத்தி விட்டு மாட்டை அவிழ்த்து மேயக்கூடியதாய் கட்டினார்

பார்சல்கள் இருந்த பெட்டியை கீழே இறக்கி வைத்துவிட்டு ''குஞ்சண்ணை நீங்கள் இப்ப எங்கை இருக்கிறீங்கள்'' என்றேன். ஏனெனில் கொட்டடிக்குச் சமீபமாக கண்ணாபுரத்தில்

இருந்த அவரது வீடு தரை மட்டமாகி இருந்தது எனக்குத் தெரியும். உடுத்த உடுப்புக்கு மாற்று உடுப்புக்கூட இல்லாமல், இருந்த சிலதையும் முழுதாக இழந்துவிட்டிருந்தவர் என்பதும் முன்பே தெரிந்திருந்தது.

''தம்பி இப்ப வீ. ஏ. தம்பி லேனில் இருக்கிறன் இதுக்கு முதல்ல மானிப்பாய் பக்கத்தில ஒரு பனங்காணியில் குடியிருந்தனாங்கள் அதுக்குள்ளயும் குண்டு போட்டதில எங்கட கொட்டிலும் சரியாய்ப் போச்சு இப்பயும் வீ. ஏ. தம்பி லேனில் தெரிஞ்ச ஆளின்ரை காணிக்குள்ள ஒரு கொட்டில் போட்டு இருக்கிறன். அவவும் அங்க பக்கத்தில இருக்கிற காம்பில போய் சமைக்கிறவ'' என கதைகள் கூறிக் கொண்டார்

''ஓ...'' இழப்புகளால் உரம் பெற்றுக் கொண்டு குடும்பமாகவே இயக்கத்துடன் ஐக்கியமாகி வரும இந்த மக்கள் தான் ''எங்களின் சொந்த மக்கள்'' என உரத்துக் கூவவேண்டும் போல இருக்கிறது.

மணி 3-00 எனக் குறித்து விட்டு சாப்பாட்டுப் பார்சல்களைப் பிரித்து பொயின்றுகளுக்கு அனுப்பி விட்டு வெற்றுப் பெட்டியுடன் குஞ்சண்ணையை வழியனுப்பி வைக்கிறேன். இன்றைய நாளில் இனிக் குறிக்க எதுவுமில்லை நாளை விடியும் என்ற நம்பிக்கையைத் தவிர.

□□

இங்கிலாந்திலிருந்து கொலைக் குற்றவாளிகள், திருடர்கள், வீதிகளில் வீணாக அலைந்து திரிந்த காவாலிகள் ஆகியோரே ஜரிஸ் மண்ணில் குடியேற்றப்பட்டும் இராணுவ சேவையில் அமர்த்தப்பட்டும் வந்தார்கள். இங்கிலாந்தில் உள்ள குற்றவாளிகளின் வேட்டைக்களமாக ஜரிஸ் மண் ஆக்கப்பட்டது. ஆனால், ஜரிஸ் மக்கள் தமது புனித மண்ணில் குடியேற வந்த குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதில் ஆர்வம் காட்டினார்கள்.

ஆங்கிலேயா அயர்லாந்தில் குடியேற்றங்களை ஏற்படுத்திய போதெல்லாம் ஜரிஸ்மக்கள் தீரத்துடன் அதனை எதிர்த்து வந்தார்கள். குடியேற்றப்படுபவர்களை ஆங்காங்கே தாக்கிக்கொன்றார்கள். பலரை உயிருடன் பிடித்து காது, நாக்கு என்பவற்றை அறுத்து வந்தார்கள். இவ்வாறு செய்வதன் நோக்கம் என்னவெனில் இவர்களைக் காணும் ஆங்கிலேயர் யாரும் ஜரிஸ்மண்ணில் குடியேற வரமாட்டார்கள் என்பதுதான். இந்த நடவடிக்கைகள் நில ஆக்கிரமிப்புக்கு ஓரளவு தடையாக இருந்தன,

□ நன்றி — அயர்லாந்து விடுதலைப் போராட்டம்

# மரபை மீறிய, தற்குறிப்பேற்றக் கலை.



சோ. கிருஷ்ணராஜா

கவிஞரான எவ். ரீ. மறிநெற்றி என்பவர் 1909 ஆண்டு மரபை மீறிய தற்குறிப்பேற்றக்கலைக்குரிய அறிக்கையை பரீஸ் நகர புதினப்பத்திரிகையொன்றின் முதற் பக்கத்தில் வெளியிட்டதைத் தொடர்ந்து புதியதொரு ஓவிய கலைப்பாணிக்கு வித்திட்டார். மரபைமீறிய தற்குறிப்பேற்றக்கலை என்ற பதம் உலகின் எல்லாக் கலைஞர்களையும் கவர்ந்தது. இத்தாலியில் ஒன்று கூடிய ஆர்வமுடைய கலைஞர்கள் ஓவியத்தில் இதனை எவ்வாறு செயற்படுத்தலாம் என ஆராய்ந்தனர். இறுதியில் 1910 ல் ஓவியர்களுக்கான மரபை மீறிய தற்குறிப்பேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

மரபைமீறிய தற்குறிப்பேற்ற கலை அறிக்கையைத் அடியொற்றி கார்லோ காரா, உமேட்டோ, போசியோனி, லூசி ரூஸ்லோ என்ற மூவரும் புதிய ஓவிய மரபினைத் தொடக்கி வைத்தனர். இம்மூவரினதும் ஓவியப்படைப்புகள் இக்காலத்தில் புரட்சிகர மாற்றத்தை சுட்டி நின்றன.

ஓவியத்தில் கியூபிசத்தின் பக்கவிளைவே மரபை மீறிய தற்குறிப்பேற்றக் கலை என்றதொரு தவறான அபிப்பிராயம் நீண்ட காலமாக கலை விமர்சகர்களிடத்தே காணப்பட்டது. கியூபிசத்தின் அடிப்படை இலட்சியத்திலிருந்து வேறுபட்டதொரு கருத்தை முன்வைத்தவர்களாகவே மரபை மீறிய தற்குறிப்பேற்ற கலைஞர்கள் காணப்படுகின்றனர். ஒருவகையில் வெளிப்பாட்டுவாத ஓவிய கருத்துக்களின் சாயல் இவர்களிடம் உண்டெனலாம். மரபைமீறிய தற்குறிப்பேற்ற ஓவியர்களான கார்லோ காரா, போசியோனி, போன்றோர் தொடக்கத்தில் கியூபிசத்துடன் பரிச்சயமுடையவர்களாக இருந்தமையும், கியூபிசபாணி ஓவியங்களை தீட்டியமையுமே மேற்படி தவறான அபிப்பிராயம் தோன்றக் காரண

மாயிற்று எனலாம். கார்லோகாரா தனது பாணி கியூபிசத்திலிருந்து முற்றிலும் வேறு பட்டதென பிற்காலத் கட்டுரையொன்றில் குறிப்பிட்டமை இதற்கு உதாரணமாகச் சுட்டலாம்.

மரபை மீறிய தற்குறிப்பேற்ற ஓவியர்களின் பெரியளவிலான கண்காட்சி 1911 ஏப்பிரலில் மிலானில் நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து காலத்திற்குக் காலம் ஐரோப்பாவின் பிரதான மையங்கள் எல்லாவற்றிலும் கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டதுடன். அக்கால ஐரோப்பியக் கலைஞர்கள் பலரினதும் கவனத்தை தம்பால் ஈர்த்தனர்.

1912 ல் மறிநெட்டி ''கட்டற்ற சொற்கள்'' என்ற கவிதைக் கொள்கையை வெளியிட்டார். இதிலிருந்து தற்குறிப்பேற்ற ஓவியர்கள் தமது ஓவியங்களில் சொற்களையும் பயன்படுத்தினர். ஓவிய வெளிப்பாட்டிற்கு மேலதிகமாக நுகர்வோரிடம் அழுத்தத்தைத் தருவதற்காக இச்சொற்கள் ஓவியத்தில் இடம்பெற்றன. இதே காலப்பகுதியில் இசை, புகைப்படம் என்பனவற்றிலும் மரபைமீறிய தற்குறிப்பேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் வெளியிடப்பெற்றன. 1916 ல் திரைப்படத்திற்கான மரபைமீறிய தற்குறிப்பேற்ற அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு, அதனடிப்படையில் ''*Perfido qncanto*'' என்ற திரைப்படமும் தயாரிக்கப்பட்டது.

தற்குறிப்பேற்ற வாதிகள் தமது கலைக் கொள்கை இயக்கவியற் தன்மையுடையதென்றும். அது உள்ளுணர்வை முதன்மைப் படுத்தி புலன் அனுபவத்திலிருந்து பெறப் படுவதை அழுத்தமாகத் தருவதாகும். எனக் கூறினர்.

மறிநெட்டியின் மரபைமீறிய தற்குறிப்பேற்ற அறிக்கையில் (1908) காணப்படும் பின்வரும் வசனங்கள் மேற்படி கலைக் கொள்கையை நன்கு விளக்குகிறதெனலாம்.

1. பகுத்தறிவிலிருந்து விடுவித்துக்கொள்க.
2. அபாயத்தை விரும்பி வரவேற்போம்.
3. துணிவு, துடுக்கு, புரட்சி என்பனவே கவிதையின் அடிப்படைகள்.
4. வேகம் என்ற புதிய அழகினால் உலகு வளம் பெற்றுள்ளது.
5. போராட்டத்தைத் தவிர அழகென எதுவுமில்லை.
6. போரைப் போற்றுவோம்.
7. ஒழுக்கம், பெண்மைத்தனம், கோழைத்தனம் என்பனவற்றிற்கு எதிராகப் போராடுவோம், நூல்நிலையங்களையும், அரும்பொருட் காட்சியங்களை அழிப்போம். அரும்பொருட்காட்சிச் சாலைகள் சவக்காலைகளாகும்

1916 ஏப்பிரலில் வெளிவந்த பிறிதொரு அறிக்கையில் மறிநெட்டியின் கவிதைக் கொள்கையை ஓவியத்திற்கும் உரியதாக்கும் வகையில் பின்வரும் கருத்துக்கள் காணப் படுகின்றன.

1. உண்மையைத் தேடும் ஆர்வமுடையவர்களான எமக்கு ஓவிய வடிவம், வர்ணங்கள் பற்றிய எமது காலத்தவர்களின் கருத்துக்கள் திருப்தியளிப்பன வல்ல
2. உலகமும், அதிலுள்ள எல்லாப் பொருட்களும் விரைவாக இயங்கி மாறிக் கொண்டிருப்பதால் ஓவியமும் மாறுகின்ற இயக்கத்தைப் பற்றியதாயிருத்தல் வேண்டும்.

3. ஓடும் குதிரைக்கு நான்கு கால்கள் இருப்பதில்லை. மாறாக அதற்கு இருபது கால்கள் உண்டு

4. ஓவியத்தில் நேற்று உண்மை என உணரப்பட்டது இன்று பொய்யாய் விடுகிறது.

எனவே பூரண உண்மை என ஒன்றில்லை.

7. நுகர்வோரே ஓவியத்தின் மையம். வெளியென ஒன்றில்லை. எக்ஸ்ரே போல ஓவியங்கள் ஊடுருவிக் காட்டுதல் வேண்டும்.

மரபை மீறிய தற்குறிப்பேற்றக் கலை ஓவியத்தின் புதிய அழகை உணரவேண்டின் நுகர்வோனின் ஆன்மா தூயதாயிருத்தல் வேண்டும். அவனது கண்கள் பழக்கமான பார்வையிலிருந்து விடுபட்டிருத்தல் வேண்டும். இயற்கையை நோக்குதல் வேண்டும். இதுவே ஓவியரசனைக்குரிய இன்றியமையா நிபந்தனைகளாகும் எனக் கூறுகின்ற இவர்கள் ஓவியப்பாணி வேறுபாடுகள் தம்மிடையே முரண்பட்டவை அல்ல. மாறாக பதிலீடுகளேயாகும் எனக் கூறுகின்றனர்.

ஓவியத்தில் பார்த்து வரைதலை நிராகரித்த மரபை மீறிய தற்குறிப்பேற்ற கலைவாதிகள் கலை விமரிசர்கள் கலையாக்கத்திற்கு தீங்கு விளைவிப்பவர்கள் என்கிறார்கள். இவர்கள் ஆக்கஅமைவு நற்சுவை போன்ற பதங்களைப் பயன்படுத்தி சர்வாதிகார முறையில் கலை விமரிசனம் செய்கிறார்கள். எனவே கலைஞர்கள் விமர்சகர்களிற்கெதிராகப் புரட்சி செய்தல் வேண்டும் என வற்புறுத்துகின்றனர். கவிதை சுயாதீனமாக இருப்பது போல, இசையில் பல்லியம் அனுமதிக்கப்படுவது போல ஓவியத்தில் பலவழிமுறைகளையும் அனுமதித்தல் வேண்டும்.

பிரபஞ்ச இயக்கம் புலவையுணர்வு இயக்கமாக ஓவியத்தில் சித்தரிக்கப்படல் வேண்டும் என கூறும் தற்குறிப்பேற்ற வாதிகள் ஓவிய மரபில் நூட் என்ற நிர்வாண நிலை வரைதலை நிராகரிக்கிறார்கள். நூட்டை நிராகரிப்பதற்கு இவர்கள் கூறும் நியாயம் அது ஒழுக்கத்திற்கு எதிரானது என்பதல்ல. மாறாக நூட்டில் ஒரே தன்மையே மீண்டும் மீண்டும் வருகிறது. எனவே ஒரு பத்தாண்டு காலத்திற்காயினும் நூட் வரைதல் தடை செய்யப்படவேண்டும் என்கிறார்கள்.

1922ல் நடைபெற்ற கண்காட்சியின் பொழுது பார்வையாளர்களிற்கு தற்குறிப்பேற்ற வாதிகளால் விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் பின்வரும் கருத்துக்கள் காணப்படுகின்றது. பிக்காஸோ, டோறான் லியோன், பிறாக்கோ, போன்ற நவீன ஓவியர்களின் மேதமையை நாம் மதிக்கின்ற பொழுதும் அவர்களின் கலைக்கொள்கைக்கு நாம் எதிரானவர்கள். இயக்கமில்லாத உறைநிலையையே இவர்களது ஓவியங்கள் காட்சிப்படுத்துகிறது. ஆனால் நாமோஎதிர் காலத்திற்காக இயக்க நிலையையே எமது பாணியாகப் பின்பற்றுகின்றோம். பண்டைய கலைமேதைகளின் ஓவியப் பாணியிலிருந்து மாறுபட்டு புதிய விதிகளைப் பின்பற்றும் எமது மரபு முற்றிலும் புதியதொரு பாணியாகும். இது ஆக்க அமைவிற்கு எதிரானது.

போசியோனி 1916ல் இறந்ததன் பின்னர் ஒழுங்கமைக்கப்பட்ட குழுவாக மரபை மீறிய தற்குறிப்பேற்ற வாதிகளால் இயங்க முடியவில்லை. முதலாம் உலகமகா யுத்தத்துடன் இவ்வியக்கம் செயலிழந்து போய் விட்டதெனினும், கலையை உள்ளடக்கிய பண்பாடு பற்றிய கருத்தாக்கத்தில் மாற்றம் வளர்ச்சி என்ற எண்ணக் கருக்களிற்கு ஆக்க பூர்வமான விளக்கம் கொடுத்தவர்கள் என்ற வகையில் மரபை மீறிய தற்குறிப்பேற்றக் கலையின் தோற்றம் எமது கவனத்திற்குரியது. □□□



ஆழப் பதிந்து விட்டதொரு காலச் சுவடு - ஆனையிறவுப்போர் - விடுதலைப் போராட்டத்தில் பெரும் தடயமாகி விட்ட நிகழ்வு. எல்லோருடைய நினைவுகளிலும் உப்பளமாகவே இதுவரை காலமும் இருந்த இடம், இன்று யுத்தகளமாக மாறிவிட்டது. அந்தப் பிரதேசம் எங்கும் விமானங்கள் வீசிய குண்டுகளினாலும், பீரங்கி எறிகணை களினாலும் நிலம் அதிர்ந்து கொண்டேயி ருக்கிறது.

இடைவிடாத துப்பாக்கிச் சமர் ஓய வில்லை [ முகாம்தகர்த்தெறியப்படும் வரை ஓயப்போவதில்லை] கந்தக வெடியின் புகைப்படலம் கண்மணியை எரிக்கிறது. குண்டும் குழியும் ஆகிவிட்ட நிலம், வெடி மருந்தில் கொதித்துக் கொண்டிருக்கிறது. சிங்கள ஆதிக்கத்தைத் தகர்த்தெறியும் படைமுகாம் அழிப்புப் போரில் சிந்தப்பட்ட வேங்கைகளின் குருதியின் ஈரம் தாயக மீட் பிற்காகப் போராடும் போராளிகளின் உணர் விலே புதியவிதைகளை விதைக்கிறது. இவை தமிழ் மக்களின் மனங்களில் மேலும் நம் பிக்கை ஊட்டியுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வாசற் படியின் முன் மலையாக நிற்கிறது ஆனை யிறவு இராணுவ முகாம். தமிழீழத்தின் ஏனைய நிலப் பிரதேசங்களையும் யாழ்ப் பாணக்குடா நாட்டையும் இணைக்கும் வழி யில் இந்தத் தடை நம் எல்லோருடைய தொண்டைக் குழியிலும் நெருடிக் கொண் டிருக்கும் முள்ளாக உள்ளது.

# ஆனையிறவு- ஆழப்பதிந்ததொரு, காலச்சுவடு.

"சதா"

இந்த இராணுவமுகாம் பரந்த வெளியில், அதிகமான பகுதி கடனீரேரி சூழ அமைக்கப்பட்டிருக்கிறது, ஆனையிறவுக் கடனீரேரி, தமிழீழத்திற்கு இரண்டு வளங்களை வழங்கும் சிறப்புடையது. பரந்து நீண்டிருக்கும் கடனீரேரியில், சூரியன் உதிக்கும் திசையில் பருவகால மீன்பிடி நடக்கும் சூரியன் மறையும் திசையில் உப்பு உற்பத்தி நிகழும். கிழ்த் திசையில் மாரி காலத்தில் ஆழக்கடலில் தொடும்வரை நீர் நிறைந்து அலை மோதும். மாரியில் இருந்து கோடை காலத்தின் நடுப்பகுதிவரை இந் நீர்ப்புலத்தில் இறால், மீன்பிடித் தொழில் நிகழும், அந்நாட்களில் வண்ணாங்குளத்திலிருந்து, சுண்டிக்குளம்வரை தொழில் செய்வோர் தங்குமிடங்களில் மின்னும் வெளிச்சப் புள்ளிகள் தூர இருந்து நோக்கும்போது எழில் மிகுந்த நகராகத் தோன்றும் அழகே அழகு.

சீதோஷ்ண சூழலைத் தேடி இடம் பெயர்ந்து வரும் சைபீரியப் பறவைகள் இந் நீர்ப்பரப்பை அண்டிய பிரதேசங்களில் கூட்டமாய் வந்தமரும். இந்தப் பறவைகளின் அணிவகுப்பும், இவற்றின் இசை ஒலியும் கடனீரேரியின் அமைவும் மனதில் இதத்தை ஊட்டும். இசைக்கும் பறவைகள் *Humming Birds*) என அழைக்கப்படும். இந்தப் பறவைகளை யாழ்ப்பாணத்தார் தமக்கேயுரித்தான தனித்துவமான மொழி நடையில் 'கூழைக் கிடா' என அழைப்பர்.

கடனீரேரியின் மேல்திசையில், குறிஞ்சாத்தீவு, ஆனையிறவு உப்பளங்கள், உப்பு மலைகளை உவந்து கொண்டேயிருக்கும். தமிழீழத்தின் உப்புத் தேவையை நிறைவு செய்யும் திறன் மிக்கவை இவை இரண்டும். வெள்ளிப்பளிங்கு மலைகளாக நீண்டிருக்கும் உப்புக்குவியல்கள். ஒழுங்கமைந்த சதுரக் கோடுகளாய் பார்வையில் பரந்திருக்கும் உப்புவயல்கள், அணைக்கட்டுகளில் அமைதியாக இருந்து ஒரு அத்திவாரத்தை இரகசியமாக உருவாக்குவது போல திண்மமடையும் உப்புக்குளங்கள். கோடை வெய்யில் கொதிக்க கொதிக்க உவர் நீர் ஓடிவரண்டு விளையும் உப்புவயல். நீர் வற்றும் போது பரவும் உப்புச் சேற்றின் மணமும் ஒருவகை இதம்தான்,

கூழைக்கிடாக்கள் குடிவந்திருக்கும் கடனீரேரி கோடைகால நடுப்பகுதியில் வற்றி வர வன்னிக்கும் யாழ்ப்பாணத்திற்குமான நடைபாதை இயக்கச்சி கண்டாவளையூடாகத் தொடங்கி விடும். (இராணுவ நெருக்கடிகள் இறுக்கமான போதிலெல்லாம் இப்பாதையிலேயே மக்களின் சுவடுகள் அதிகமாகப் பதிந்தவ)

ஆனையிறவிற்குத் தெற்கே பசுமை செழித்த வன்னிநாடு - நெல் விளைந்து நிறைந்திருக்கும்; நெடிதுயர்ந்த மரங்கள் வகைவகையாய் வளர்ந்திருக்கும். மந்தைகளும் லிலங்குகளும் மடைகொண்ட குளங்களும் கொண்ட நிலம். வடக்கில் செம்மண்ணில் சிறு விவசாயமும் தென்னஞ் சோலைகளும் பனங்கூடல்களுமான யாழ்குடா நாடு.

□ □ □

தமிழ்தேசத்தின் ஓரினமக்கள் ஒருமித்து வாழ்கையில் ஏனிந்தச் சிங்கள முகாம் இங்கு வந்தது. இந்த மக்களுக்காக எந்தத் தேவையுமில்லாமல் ஏன் இங்கு இருக்கிறது. இனத்தால் மொழியால் பண்பால் மதத்தால் வேறுபட்ட, இம்மண்ணுக்கு முற்றிலும் மாறுபட்ட அந்நிய இனவெறி இராணுவம் எங்களுடைய சொந்த மண்ணிற்குள் நின்று அழிவு செய்வது ஏன்?

சலங்கைகள் ஒலிக்கும் மாடுகள் பூட்டிய வண்டில்களில் அன்று வற்றாப்பளைக்கும், புதூருக்கும், புளியம்பொக்கணைக்கும் போய் வந்தோமே!

மடை திறந்த வெள்ளம்போல் மடுவுக்குச் சென்று திரும்பினோம். கடற்காற்று வருடிச் செல்ல கடல் வெளியையும் உப்பு மலைகளையும் கண்டு வியந்தோமே! அருகருகே புகைவண்டியும் பிற வண்டிகளும் போட்டியிடும் மனவுணர்வில் கிறங்கிச் சென்றோம். நெல்லும் சாமி, குரக்கன், புகையிலை, வெங்காயமும் பரிமாறிக் கொண்டோம். இவை தவிர, எத்தனை தலைமுறையாக இந்த வழியினூடே நடந்து திரிந்தோம். எங்களுடைய இராச்சியத்தின் எழில்பூத்த அக்காலத்தேயானையும்சேனையும் அணிவகுத்ததும் இந்தப் புலத்திடைதான். எத்தனை காலப் பண்பாட்டு உறவுகளைக் கொண்டிருந்தோம்.

இன்று இவை இல்லை. எதிரி வந்து இடையில் புகுந்ததால் எங்களின் உறவெல்லாம் துண்டிக்கப்பட்டது. பண்பாட்டுப் பெருவிழாக்களைப் பார்க்கமுடியாது தடுக்கப்பட்டோம். பண்டமாற்றெல்லாம் வழியடைத்ததால், வாய்க்கால் அடைத்த வெள்ளம் போலத் தேங்கிப் போயிற்று. எவ்வளவு இன்பமான கால நகர்வில் அந்தகார இருள் சூழ்ந்தது! ஆனையிறவு இராணுவம் குடாநாட்டையும் வன்னியையும் பிரிக்கும் பூதமானது! ஒரு பூகம்பம் வெடிக்கக் காரணமாயிற்று!

□ □ □

1960ம் ஆண்டுகளில் சட்டவிரோதமாக வெட்டிய மரங்கள் இடமாற்றம் செய்யப்படுவதை தடுக்கவே இந்தப் பகுதியில் முதன் முதலாகக் கடவை அமைக்கப்பட்டது. அப்போது பொலிசும், வனபரிபாலன இலாகாவினரும் கூட்டாகக் கடமை புரிந்தனர். பின்னர் 70களில் தென்னிலங்கையில் நடைபெற்ற ஜே. வி. பி. கிளர்ச்சியுடன் தொடர்ந்து இது ஒரு தடைமுகாமாக செயலாற்றியது. 80களில் எங்களுடைய தமிழீழப் போராட்டம் கூர்மையுற்றெழத் தொடங்கிய போது இம் முகாமில் தமிழ் அவலக்குரல்கள் எழுந்தன. தமிழ் இளைஞர்களின் பச்சை உடம்புகள் இரத்தக்கண்டலுடன் பழுக்க வைக்கப்பட்டன. இது விசாரணைக் களம் என்ற பெயரில் சித்திரவதைக் கூடமாக கொடூரம் புரிந்தது. இந்த முகாம் சார்ந்த பகுதிகள் இராணுவ வாடை வீசத் தொடங்கின. 80களின் நடுப் பகுதி வரை, இந்த இராணுவ முகாமலிருந்து வெளியேறும் சிங்களச்சிப்பாய்கள் இம்முகாமிற்குத் தெற்கேயுள்ள பரந்தனைச் சூழவுள்ள இடங்களையும், வடக்கில் இயக்கச்சி முதல் சாவகச்சேரி வரையிலான பகுதிகளையும் சுற்றி வளைத்துத் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இவ்வாறான போதுதான் 83ம் ஆண்டு முற்பகுதியில் வன்னிப் பிரதேசத்தின் முதல் கண்ணிவெடி ஒலித்தது. வன்னியெங்கும் அது பல சேதிகளைக் கூறியது. இந்த முகாமில் இருந்து பரந்தனை நோக்கிப்புறப்பட்ட இராணுவத்தின் மீது வயல் நிலமும் சிறுபுதர்க் காடும் சூழ்ந்த உமையாள்புரத்தில் விடுதலைப் புலிகளால் வன்னிப்பிரதேசத்தின் முதல் கண்ணிவெடித் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. கரந்தடிப்படை முறையில் மேற்கொள்ளப்பட்ட அத்தாக்குதல் இராணுவத்திற்கு உடல் ஊறுபாட்டையும், உள அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது.

இவ்வான தாக்குதல் சம்பவங்கள் இராணுவம் வெளியேறும் சந்தர்ப்பங்களில் இருபுறத்தும் நிகழ்ந்தன. 85ன் நடுப்பகுதியில் இம்முகாமின் இருபக்கங்களிலும் போராளிகள் காவலரண்களை அமைத்தார்கள். முகாம் முற்றுகைக்குள்ளானது. —இராணுவம் முடங்கியது. ஆனாலும் இனவெறியன் இருப்பானா சும்மா? வெறிச் சன்னதங் கொள்ளும் போதெல்லாம் சன்னங்களைப் பொழிந்தபடி, இனஅழிப்பிற்காக இரத்தம் குடிப்பதற்காக முகாமை விட்டு இராணுவம்

வெளியேற முற்பட்டது. இராணுவம் முகாமைவிட்டு முன்னால் காலடி வைக்க முற்பட போராளிகளால் தடுத்துத் தாக்கித் திருப்பி அனுப்பப்பட்டது. எண்பத்தி ஏழில் இந்தியப்படை இங்கு வரும் வரை இந்த நிலமை நீடித்தது.

☐ ☐ ☐

இந்திய இராணுவம் இங்குவந்த போது அவர்களும் ஆனையிறவில் முகாமிட்டு இருந்தனர். சிறீலங்கா இராணுவத்தின் அக்கம் பக்கமாகவே இந்திய இராணுவத்தின் முகாமும் அமைந்தது. சிறீலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகளை இந்திய இராணுவம் மேற்கொள்ளலாயிற்று. இச் செயல் தமிழீழ போராட்டத்தை ஒடுக்குவதில் இந்தியாவும் இலங்கையும் இரட்டைக்குழல் துப்பாக்கியாகச்செயற்பட்டார்கள்என்பதைச் சான்று பகருவதாகும். இலங்கை இராணுவமோ, இந்திய இராணுவமோ இப் பகுதியூடாகச் செல்லும் பயணிகளுக்குச் சோதனைச் 'சா' வடியாகவே இருந்து வந்தன.

இரத்தம் சிந்திய போராட்டத்தின் விளைவாக இந்திய இராணுவம் வெளியேறியதைத் தொடந்து தொண்ணூறில் மீண்டும் இம்முகாம் விடுதலைப் புலிகளின் கடும் முற்றுகைக்குள்ளானது. இங்கிருந்த தரைப் படை தம்மைத் தங்கவைத்துக் கொள்ள முற்று முழுதாக விமானப்படையின் முழுமையான ஒத்துழைப்பை நாடவேண்டியதாயிற்று முற்றுகை நெருங்க, நெருங்க தரையிறங்கும் உலங்கு வானூர்திகள் புலிகளின் தாக்குதல்களுக்குப் பயந்து தயங்கத் தொடங்கின, அத்துடன் தொண்ணூறு நடுப் பகுதி தொடக்கம் இப்பகுதியூடாகச் சகல பிரயாணங்களும் முற்றாகவே தடைப்படுத்தப்பட்டன. இப்பகுதியூடாகப் பயணித்த மக்கள் இந்தத் தடைகாரணமாகப் பழக்கமற்ற சீரில்லாத பாதைகளால் பிரயாணத்தைத் தொடர வேண்டியதாயிற்று. பொருளாதாரத் தடையும் போக்குவரத்து நெருக்கடிகளும் தமிழ் மக்களை மேலும் வறுமைக் கோட்டை நோக்கிய விசையை அழுத்தலாயிற்று ஆனாலும் தமிழ் மக்கள் சோராது காடுகளுக்குள்ளாலும் சதுப்பு நிலங்களாலும் பயணத்தைத் தொடர்ந்தனர். ஆனால் போராளிகளின் காவல் நிலைகள் நாளும் பொழுதும் முகாமை நோக்கி நகர்ந்து கொண்டேயிருந்தன.

முகாமைச் சூழவும் சதுப்பு நிலமான வெட்டைவெளி. காப்பரண்களோ பதுங்கு குழிகளோ அமைப்பது மிகச் சிரமமானது. காப்பு அகழிகள் வெட்ட வெட்ட நீர் ஊற்றெடுத்து அகழிகள் இடிந்து வீழ்ந்தன. போராளிகளின் ஒவ்வொரு நகர்வுக்கும் அசைவுக்கும் இலக்கு வைத்தபடியே இராணுவம் இருந்தது. புலிகளின் முனைப்பான, முன்னேற்ற நடவடிக்கைகளை இராணுவம் கடுமையான தாக்குதல்களால் குலைக்க முயன்று கொண்டிருந்தது. விமானக் குண்டு வீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல்கள் என ஓயாத எதிர்ப்பை இராணுவம் நடத்தியது. ஆனாலும் புலிகள் முன்னேறிக் கொண்டிருந்தார்கள். இந்தமுன்னேற்ற முயற்சிகளின் போதே இரத்தம் சிந்தவேண்டியேற்பட்டது. ஆனையிறவில் இராணுவத்தின் வளங்கள் பாதிக்கப்பட, கிளிநொச்சி இராணுவ முகாமும் இவ்வாறானதொரு இறுக்கமான நெருக்கடி நிலைக்குள்சிக்குண்டு போயிருந்தது.

☐ ☐ ☐

விடுதலைப் புலிகளால் கொக்காவில் இராணுவ முகாம் தகர்த்து வெற்றிகொள்ளப்பட்ட போது கிளிநொச்சியில் இருந்த பொலிஸ் - இராணுவக் கூட்டு முகாமின் தலைவிதி கேள்விக்குரியதாகியது. முற்றுகைக்குள்ளான கிளிநொச்சி முகாமை விட்டு வெளியேறிய இராணுவம் ஆனையி

றவுக்கு வந்து உப்பளப் பகுதியில் குடி கொண்டது. உப்பு விளையும் தளம் யுத்தத்திற்கான களமாயிற்று. ஏறக்குறைய 35 ஏக்கரில் இரண்டு மைல் நீளத்திற்கு விஸ்தரிக்கப்பட்ட இந்த முகாம்களும் முற்றுகைக்குள்ளாகி அடிக்கடி புலிகளின் தாக்குதல்களுக்குள்ளாகி வந்தன.

இராணுவத்தின் ஒவ்வொரு அசைவையும் தடுக்க இலக்கு வைத்தபடி நின்றனர் போராளிகள், சிங்களப் படையை அகற்றுவதற்காக இரவும் பகலும் எந்தநாளும் சோராது கடுமையாக உழைத்தனர். அமைக்கப்பட்ட காப்பரண்களும், தாக்குதல் நிலைகளும் மாரிமழையில் போராளிகளுக்கு இன்னும் வேலைப் பழுவைத் தந்தன. - நீர் நிரம்பி இடிந்து விழ விழ புதிதுபுதிதாக நிலைகளை அமைக்க வேண்டியதாயிருந்தது

போராளிகள் சிரமங்களுடன் கடுமையாகப் போராடினார்கள். இராணுவம் தாக்குதல் நடத்திக்கொண்டேயிருந்தது. இடையறாத முயற்சிகளினால் தரைமேல் அரண்களும், வேறுதயாரிப்பு நிலைகளும் போடப்பட்டு முற்றுகையை இன்னும் இறுக்கினர் போராளிகள்.

இராணுவம் அசைய முடியாத முற்றுகையில் சிக்குண்டு போயிருக்கையிலும் தனது இரும்புக் குழாய்களில் தீயைக் கக்கிக்கொண்டேயிருந்தது. இன்னல் புரிந்து வந்த இந்தச் சிங்களப் பேய்களை அழித்து, இந்த நிலத்தின் தடைப்பட்டிருந்த பகுதியை மீட்க, சூழலை அச்சமூட்டிக்கொண்டிருக்கும் பூதங்களை ஒழிப்பதற்காக முகாமை முற்றாகத் தகர்க்கும் தாக்குதல் இவ்வருடம் ஆடி மாதம் 10ம் திகதி ஆரம்பமானது.

விடுதலைப்புலிகளின் திறனாலும்கடின உழைப்பாலும் உருவாக்கப்பட்ட கனரக வாகனங்கள் ஒரு யானைப்படைபோல முகாமைச் சூழ்ந்தன பசிலன் தொடக்கம் சிறு

## ஈனம் படைக்க வந்தால்.

நரங்கள் சிந்தும் குருதியெல்லாம்
இந்துமா கடலலை போல்
இந்தக் கடல் நடுவே கொந்தளிக்கும்
கொட்டமடக்கிடும்.
கொடியவர் தன்னையே மூழ்கடிக்கும்
இங்கு
நீலக் கடலலைகள்
நிறம் மாறிப் போனதுவோ
வானம் அது சிவந்து
வந்த மழை நீரிதுவோ
நம் நிலத்தில்
என்னவென்று சொல்லி விட
எதையென்று நாம் உரைக்க.
காற்றுக் கூட
வீட்டினுள் புகுந்து விட்டால்
நெட்ட நிமிர்ந்துமே நின்று
நியாயம் கேட்கும் ஓலைகள்.
புற்களெல்லாம்
பிணைந்து நின்று
பகைவர்களை வீழ்த்திவிடும்.

ஈரநெஞ்சம் கொண்டவர் நாம் - யாரும்
ஈனம் படைக்க வந்தால் - தன்
மானம் விட்டிடுமோ
பொருட்களைத் தடை விதித்தால்
போயிடுமோ நம் உயிர்கள்
பட்டினி நாம் கிடக்கப்
பனை மரங்கள் படுத்திடுமோ
நாட்டிய பயிர் விதைகள்
நம்மவரை விட்டிடுமோ
பட்டோம் படுகிறோம் பாடு; அதனால்
பாடுகிறோம்
கொடிய பகைவர்கள்
கொட்டமடக்கிடும் நாள் எட்டிடுமோ
இல்லைக் கிட்டிடும்
நட்ட உயிர் விதைகள்
நல்ல பயன் தரும்.

□ இளந்திரையன்.

# புலிகளின் பலம் ஆயுதத்தில் மட்டுமல்ல.



*விடுதலைப் புலிகளின் பலமென்பது அவர்களின் கையில் இருக்கும் ஆயுதங்களால் அல்ல... மனதிலிருக்கும் உறுதியினால் தான் ஏற்பட்டது. இந்த மண்ணை நேசிக்கும் ஒவ்வொரு போராளியும் தனது மரணத்தை ஒவ்வொரு வழியில் தேடிக்கொள்கிறான். தனது உயிர்த் தியாகத்தால் இந்த மண்ணுக்கு விடுதலை கிடைக்குமாக இருந்தால், தனது சாவு இந்த விடுதலைப் போராட்டத்தை உன்னி முன் தள்ளுமாக இருந்தால்... அந்தச் சாவை அணைத்துக் கொள்வதில் எங்கள் போராளிகள் ஒவ்வொருவரும் போட்டியிட்டார்கள். அந்தச் சாவை விரும்பி அணைத்தார்கள்.*

**விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர்**
**திரு கோ. மகேந்திரராசா**
**(நாலாம் ஆண்டு திலீபன் நினைவு உரையிலிருந்து)**

ரகப் பீரங்கிகள் வரை இடிபோல முழங்கிக் கொண்டிருந்தன. போராளிகள் முகாமைச் சூழவும் அணிவகுத்து நின்றனர், வெளிகளிலும் சதுப்பு நிலங்களிலும், சிறு மொண்டிப் பற்றைக் காடுகளிலும் தேசக் கடமை புரிந்தனர். முதல் நாள் போர் புலிகளுக்கு வெற்றியை கையில் தந்தது. முகாமின் சில பகுதிகள் போராளிகளினால் கைப்பற்றப் பட்டன. சிங்கள இராணுவம் மூச்சுத் திணறியது. சிறீலங்கா அரசு முகாமைக் காத்துக் கொள்வதற்காக தனது முழுப்பலத்தைப் பாவித்தும் இராணுவம் ஈடாடத் தொடங்கியது. புலிகளின் விமான எதிர்ப்புப் பீரங்கிகள் முழங்கின தீயை உமிழ்ந்து விமானங்களை எரித்துவிடத் துடித்தன அவை. 5000 அடிக்கப்பாலே அடையாளம் தெரியாமல் விமானங்கள் தடுமாறின. அரசின் விமானப் படையும் பலமிழந்து போய் விட்டதென' சிறீலங்கா அரசின் மூத்த இராணுவ அதிகாரிகளே ஒப்புக்கொண்டனர்.

புலிகள் முகாமைத் தொடர்ந்து தாக்கிக் கொண்டிருந்தனர். இராணுவம் இறுகிப் போயிருந்தாலும் எதிர்த்துக் கொண்டேயிருந்தது. மழைபோல சன்னங்கள் பொழிந்தன. பீரங்கி எறிகணைகள் பூமியைப் பிளந்து கொண்டிருந்தன. விடுதலைப் புலிகள் சளைக்கவில்லை. சன்னங்களுக்கும் இடி போன்ற வெடிகளுக்கும் பதில் கொடுத்துக் கொண்டே முன்னேறினார்கள். உவர் பித

பிசுக்கும் நிலம் இரத்தத்தில் தோய்ந்து சிவந்தது.

மட்டுப்படுத்தப்பட்ட வளங்களோடு எதிரியை எதிர்கொண்ட புலிகளின் உறுதியான நடவடிக்கைகளின் விளைவாக பல மிழந்த சிங்கள இராணுவம், முகாமினுள்ளே சிக்குண்ட தனது சகாக்களை மீட்பதற்காக கடற்படையுடன் சேர்ந்து முயற்சித்தது. இதனால் கடற்படைமூலம் ஆனையிறவின் வடகிழக்குத் திசையிலுள்ள வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டுக் கடற்கரைப் பிரதேசத்தில் இராணுவத்தை இறக்கி புலிகளின் பலத்த எதிர்ப்புகளின் மத்தியில் ஆனையிறவை நோக்கி நகர்த்த முற்பட்டது. இப்போது பிரதான யுத்தமையம் ஆனையிறவில் இருந்து கட்டைக்காடு வெற்றிலைக் கேணிப் பகுதிக்கு நகர்ந்தது.

□ □ □

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் பாதுகாப்பு படையாக இருக்கும் அதே வேளையில், தேசிய விடுதலை இராணுவமாகவும் இருபரிமானங்களையுடைய தமிழர் படையாக விளங்கி வருகிறார்கள். தமிழ் மக்களின் இந்தத் தேசிய விடுதலை இராணுவம் முதன் முறையாக ஒரு மரபு வழி இராணுவமாக மாற்றம் பெற்று சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்துடன் முதன் முதலாக நேருக்கு நேர் பெரும் யுத்தத்தில் இறங்கியது.

சுடும் மணலில் கடும் போர் மூண்டது. பாலைவனம் போன்ற மணல் வெளிப்பிரதேசத்தின் வெட்டவெளியெங்கும் துப்பாக்கி ரவைகளாலும், பீரங்கிக் குண்டுகளாலும் நிறைந்தது. அங்கு வீசியகாற்றின் ஒவ்வொரு அசைவிலும் கந்தக வெடியின் நெடியே கலந்திருந்தது. வானத்தில் வட்டமிட்ட இராட்சத சீனப் பறவைகள் பாரிய வெடி குண்டுகளை வீசின. மாரிகாலத்து இதமான சுவாத்திய சூழலைச் சுவாசிப்பதற்காக ரஷ்யப்பறவைகள் வந்தமரும் அமைவிடங்கள் எல்லாம் சீனத்துப்பறவைகள் போட்ட சிறீலங்காவின் குண்டுகளால் சிதைந்து போயின. சிறுபற்றைக் காடுகள் தீயில் கருகின. யுத்தகளத்தை அண்டிய பிரதேசத்து மக்கள் நிர்க்கதியாகினர்.

''வெற்றிலைக் கேணிப் பகுதியில் வந்திறங்கிய ஒப்பரேசன் பலவகேயவின் 2000 இராணுவம் 48 மணிநேரத்தில் ஆனையிறவு முகாமைச் சென்றடைந்துவிடும்'' என யாழ்மாவட்ட சிறீலங்கா இராணுவத்தளபதி விஜயவிமலரட்ண கூறினார். புயல் வேகத்தில் புறப்படும் என்று கூறிய இராணுவ அணி நத்தை வேகத்தில் கூட நகர முடியாமல் போயிற்று, இராணுவத்தின் நகர்வை முறியடிக்க விடுதலைப்புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலால் சிங்களப்படையணிகள் சிதறின. களத்தில் மாண்டோரையும்காயப்பட்டோரையும் மாற்றீடு செய்தால் மட்டும் போதாதென்று உளவியல் ரீதியாகப் பின்னடைந்துபோன ஒரு அணியையுமே மாற்றி அமைக்க வேண்டிய தேவை மாற்றான் படைத்தளபதிகளுக்கு ஏற்பட்டது. இவற்றுடன் சிறீலங்கா இராணுவத்தளபதி ஹமில்டன் வனசிங்கா நேரடியாகக் களத்திற்கு வந்து திட்டம் வகுத்து. மேலும் படையணிகளையும் களத்திற்கு வரவழைத்து போரில் ஈடுபடுத்தினார். இந்தப் போர் நடத்தைக்கு ஒப்பரேசன் பலவகேய' என்ற பெயரும் சூடப்பட்டது. சிங்களப்படையணி வடபிராந்தியத்தளபதி கொப்பேகடுவவின் தலைமையில் போரிட்டது.

போரின் சூடு இரண்டு நாட்கள் சற்றுத் தணிந்த ஒய்வில் படையணிகளை இருமடங்காக அதிகரித்துக் கொண்டு ''போருக்கெல்லாம் தாய்ப்போர்' என முரசறைந்து முன்னேற முயன்ற எதிரி மூக்குடைந்தான்.

இதனால் கட்டைக்காடு எதிரிக்குச் சுடு காடானது. மேலும் இரண்டு படையணி கள் இறக்கப்பட்டன. இப்போது படையின் எண்ணிக்கை 8000 ஆகியது. பெருகிய துருப்புக்கள் மெல்ல மெல்ல புல்லாவெளி வரை நகர்ந்தன. இதன் போது எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் முன் னோடிப் போராளியான லெப் சீலனின் நினைவுப்பெயரில்அமைக்கப்பட்ட 'சார்ள்ஸ் அன்ரனி சிறப்பு படையணி'' களத்தில் இறங்கியது. எதிரியைக் கலங்க அடித்தது.

சிங்கள இராணுவச் சங்கிலியை இடை யில் ஊடுருவிப் புகுந்து உக்கிரமாய்த் தாக் குதல் நடத்தியது. இராணுவம் சின்னாபின் னமாகச் சிதறியது. சகபாடிகளின் சடலங் களை அந்தந்த இடங்களிலேயே விட்டுச் சிங்களப்படை ஓடித்தப்பியது. எதிரி கொண்டுவந்த ஆயுதங்கள் பல எங்களுக் குச் சொந்தமாயின.

சீர்குலைந்த சிங்களப்படையணியை மீண்டும். புனரமைத்து நிமிர்த்தி நிறுத்த வேண்டிய தேவை இராணுவத்திற்கு ஏற் பட்டது. மீண்டும் கடும்போர் மூண்டது. அகோர விமானத் தாக்குதல்களினூடே, கண்முன்னே ''கங்கு'' மட்டையால் காப் பரண்கள் அமைத்து எதிரியின் கடுமை யான தாக்குதலுக்கு முகம் கொடுத்துப் போராளிகள் போராடினார்கள். இராணு வம் கடல்வழியாகத் தரையிறக்கிய கனரக வாகனங்கள் பல புலிகளால் நாசமாக்கப் பட்டன. எங்கும் புகைமண்டலம், வெடி அதிர்வோசைகளுமே பரவியிருந்தன. அந்தப் பிரதேசத்து நிலம் இரத்தத்தில் தோய்ந்தது தாக்குதல்களில் சிதறிய தசைத் துண்டங்கள் இரத்தக் கட்டிகட்டியாக கண்டவரின் நெஞ் சை உருக்கியது. புலிகள் போரிட்டுக் கொண்டேயிருந்தார்கள். நாட்கணக்காக வாரக்கணக்காக ஓயாத போர் நிகழ்ந்து கொண்டிருந்தது. அந்தப் புழுதி மண்ணி லும் நம் புதல்வர்கள் விடுதலைப் பயிருக்கு இரத்தத்தால் ஈரம் பாய்ச்சிக் கொண்டே யிருந்தார்க்ள்.

இவைகளை அவதானித்த சிங்களப் பேராசிரியர் ஒருவர் 'இப்போது இலங்கை யில் இரண்டு இராணுவம் இருக்கின்றது'' என்றார். இதற்குப் பதிலளித்த போராளி கள்'' இரண்டு இராணுவம் உண்டு என்பது உண்மைதான் ஒரு இராணுவத்திற்கு நாடு உண்டு. மற்றயதற்கு நாடு இல்லை. அதற் காகப் போரிடுகிறது'' என்று உண்மையை விளக்கினார்கள்.

□ □ □

போராட்டம் வெற்றி பெறுவதற்கு மக்கள் ஆதரவு நிறையத்தேவை. ஆனை யிறவுப் போரில் மக்கள் ஆதரவு கிடைத் தது. அந்த ஆதரவு உணவு, மருத்துவ உதவி, போர்க்களத்து பின் பல உதவிகள் என்ற எல்லையுடன் நின்று கொண்டது. ஒரு போராளி தனது அத்தியாவசிய தேவை களையெல்லாம் நிறைவேற்ற, பிரதியீடு செய்ய ஆட்பலமில்லாமல்இருந்தது. இந்த நிலையால் தொடர்ச்சியாகப் பல போரா ளிகள் பல நாட்கள் குளிக்க முடியவில் லை. உண்பதற்குக்கூட நேரமில்லாமல் இருந்தது. ஒய்வதற்கும் நித்திரை செய்வ தற்கும் ஓர் கணப்பொழுதும் இருக்கவில் லை. இந்த அசாதாரண சுமை போராளி களைப் பெரும் சிரமங்களுக்குள்ளாக் கியது அவர்கள் திடப்படுத்திவைத் திருந்த மன உறுதியும், இலட்சிய வேட்கை யும் தான் தாயகத்திற்கான இந்தப் பணி யில் தளராமல் முனைப்படைய வைத்தன. ஒரு போராளி தனது அத்தியாவசிய தேவைக்காக போர்முனையில் இருந்து அகன்றால் அந்த இடத்தில் நின்று இராணு வத்தை எதிர்க்கக் கூடிய ஆட்பலத் தேவை பூர்த்திசெய்யப்படாதது பெரும் வெற்றிட மாகும். யுத்த முனையில், முன்னணிப்

படையணியில்,போராளிகளின் நிழலில், அருகில் மக்களும் நின்றிருந்தால் இன்று சரித்திரம் வேறாக இருந்திருக்கும். இதே வேளையில் எதிரியின் நிலமை வேறாக இருந்தது. இத்தளத்தில் இருந்து நோக்கும் போது அவனுக்கு ஆட்பலத்திற்கு குறைவிருக்கவில்லை. உண்பதற்கும் உறங்குவதற்கும் ஓய்வதற்குமாக அவனுக்கு பிரதியீடாக மற்றைய அணிகள் இருந்தன.

காயம் பட்ட எதிரியின் இடத்தில் நிற்பதற்கு இன்னொருவன் இருந்தான். போதிய ஆட்பலம் இருந்ததால் அவனது துப்பாக்கி எந்த நேரமும் கனன்று கொண்டேயிருந்தது.

எங்கள் போர்க்களத்தில் எங்கு பார்த்தாலும் போரிடும் மக்கள் நின்றால் வெற்றியின் தூரம் அதிகம் இல்லை. தாயகத்தின் மீட்பிற்காக, தமிழ்மக்களின் சுதந்திர வாழ்விற்காக இரத்தம் சிந்திய, இன்னுயிரை ஈந்த போராளிகளின் உணர்வுகளுடன் அனைவரும் போரிட எழுவோம். சுதந்திர பூமியில் வாழ்வதற்காகத் துணிவோம். ஆனையிறவு வெல்லப்படும். அதைப்போல் தமிழீழத்தின் அனைத்து எதிரிப்பாசறைகளையும் தகர்த்தெறியப் படும். □□

## இரத்ததானமும் பெண்களும்

இரண்டாவது உலகயுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை லிடியா 17 வயது மாணவி லெனின் கிராட்டைச் சேர்ந்தவள் நர்ஸ் பயிற்சியை முடித்த கையோடு போர் முனை ஒன்றில் மருத்துவ சேவைக்கு சேர்ந்தாள். பாயும் குண்டுகள், துப்பாக்கி வெடி, காயமுற்று அரற்றும் ஆட்கள், இரத்தம் கண்ணீர், மரணம், ஓலம் என்னும் சூழலில் பம்பரம் போன்று சுழன்று பணி புரிந்தாள். அவளது இரத்தம் எல்லோருக்கும் பொருந்தும். முதல் பிரிவைச் சார்ந்தது. உயிருக்கு போராடிய போர் வீரர்களுக்காக அவள் 30 தடவைகள் இரத்ததானம் செய்தாள். இவள் போன்று போர் வீரர்களுக்காக இரத்ததானம் செய்வதில் சோவியத் பெண்கள் பெரும் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். 5 ஆண்டுகள் முடித்த யுத்தத்தில் படை வீரர்களுக்கு இரத்ததானம் வழங்கியவர்களில் 90% மானோர் பெண்களே. போராளிகளுக்காக 17 இலட்சம் லீட்டர் இரத்தத்தை அவர்கள் கொடுத்தார்கள்.

வரலாற்றுப் பெரும் போரான ஆனையிறவுப் போரில் வீரமரணமடைந்த கப்டன் வானதி கப்டன் கஸ்தூரி ஆகிய பெண் போராளிகள் எழுதிய கவிதைகள் இவை.



## வேங்கைகளின் வேந்தன்

# "வானதி"

தமிழினம்
தொலைத்து விட்ட
சுதந்திரத்தை தேட,
தமிழினம் விற்றுவிட்ட
தன்மானத்தை - மீண்டும்
மீட்க
தலை நிமிர்ந்த
மனிதனை
தமிழினம் காண
வீரத்தாயின்
பிரசவ வேதனையின் பின்னால்
ஓர் ஜனனம்!
அன்றைய குழந்தை தான்
இன்றைய
''வேங்கைகளின் வேந்தன்''

அன்றைய - அந்த
குழந்தைச் சிரிப்பு
இன்னும்
இவனுடன்
கொஞ்சிக் குலாவும்
அந்த
குழந்தையுள்ளம்
இன்னும்
இவனுடன்
சொந்தம் பேசும்!
பிஞ்சுக் கால்களின்
பூப்போன்ற மென்மை
இன்னும்
இவன் இதயத்துள்
இமயமளவுயரத்தில்!

வீரம் - அது
இவன்
காலடிச் சுவடுகளிலிருந்து
விழித்துக் கொள்ளும்
இவனது
சுதந்திரச் சிறகுகள்
அகலமானவை!
மிக...மிக அகலமானவை
அதனால்
இவனைச் சிறைவைக்க
முயன்றவர்கள்
தங்களையே
சிறைக்குள்
போட்டுக் கொண்டார்கள்!

இராமனின்
சந்தேகம் தீர
சீதையின் தீக்குளிப்பை
பாரதம் பாராட்டி
பத்தினியென்று
பூச்சூடுகிறது!
ஆனால் - இங்கே
இவனோ
வாழ்வின்
ஒவ்வோர் அத்தியாயத்தை

புரட்டும் போது
ஓராயிரம் தடவைகள்
தீக்குளிப்பு
செய்கிறானே!
யாருக்கிந்த
யதார்த்தம் தெரியப் போகிறது?

இவன்
எல்லாவற்றையுமே
தனக்குரியதாக்கி
எதையுமே
தனக்கென்று
சொல்லத் தெரியாதவன்!

அச்சத்துக்கு கூட
இவனிடம் அச்சம்
அதனால், இவனை
அண்டியதே இல்லை!
பாரபட்சம் - அது
இவனுடன் பாசங் கொண்டாடியதேயில்லை
வரலாற்றை
வழிகாட்டியாக
வரித்துக் கொண்டவன்
இன்று - ஓர்
வரலாற்றுக்கே
வழிகாட்டியாகி விட்டான்

இயற்கையை
நண்பனாக்கியவன்
இன்று
இயற்கைக்கே
நண்பனாகி விட்டான்.
வாழ்க்கையை
தத்துவாசிரியனாக
ஏற்றவன் - இன்று
தமிழீழத்தின்
வாழ்க்கைக்கே
தத்துவாசிரியனாகி விட்டான்!

இவன் கைகள்
மட்டுமே
ஆயுதம் ஏந்தும்
இவன் கண்களோ
கருணை வெள்ளத்துள்
நீந்தும்
அன்புக்கு
அர்த்தம் பார்ப்பதற்கு
அகராதியை தட்டுவதை விட
இவனது
ஒவ்வோர்
அணுகுமுறையிலும்
ஓராயிரம்
அர்த்தங்களை
படித்துக் கொள்ளலாம்!

பாரதத்து
பாரதியால்
பாட்டில் மட்டுமே
காட்ட முடிந்த
''புதுமைப் பெண்களை''
இவனோ
காட்டிலே உருவாக்கி
களத்திலே காட்டுகிறான்
சமூகத்தின்
பிற்போக்கு
சிந்தனைகள்
இவனது சீற்றத்தீயினால்
வெந்து .....வெந்து
சாம்பலாகியபடியே...!

எழுதி......எழுதி......
எத்தனை
எழுதியும் .....
இவனைப் பற்றி
சொல்ல முடிவது
சொற்பமே!
சொல்லக் கிடப்பதோ
மிச்சம்!!
உலகத்தின் கணிப்பில்
உன்னத ஸ்தானத்தை
தன்

உரிமையாக்கியவன்
உண்மையின் உறவுடன்
உருவாகிக் கொண்டிருக்கும்
தமிழனின்
தனிநாட்டில்
தமிழீழத்தில்

நாளை
தேசியக் கொடியில்
சேனை அசைந்திடும்
வேங்கையின் வேந்தனின்
''வீரம்'' வென்றிடும்!!!

**(26 - 11 - 89 அன்று தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் பிறந்த நாளுக்கு வாழ்த்துக்கூறி எழுதப்பட்டது)**

---

**"கஸ்தூரி"**

# விடுதலை நெருப்பே!



திக்குகள் அதிர
தீயவர் ஒழிய
பசியோடு வயிறது
பற்றியெரிய

விசுவரூப மெடுத்த
விடுதலை நெருப்பே,

உந்தன்
அடிமுடி அறிந்து
அழிக்க முடியாமல்
பிரளயங்கள் அன்று
பின்வாங்கிச் சென்றன

வெம்மையின் முன்னால்
வெற்றி கொள்ள முடியாமல்
வெறியர் படை
மிரண் டோடியது.

தேசத்தின் தாகமறிந்து
தீர்த்து வைத்த தியாகியே,
விடுதலைக்கு
மூச்சுக் கொடுத்தவளே

காற்றுக்குள் உன்னை
காண்கிறது காலம்
தண்ணீருக்குள் உன்னை
தழுவுகிறது தமிழ்
உணவுக்குள் உன்னை
உணர்கிறது உரிமை.

அந்தோ......!
அண்டங்களின் ஐம்புலன்களின்
அறிவுக்கப்பாலும்
நீண்டு நீண்டு செல்லும்
நினைவானாள் பூபதி.

**(அன்னை பூபதி நினைவு நாளில் எழுதப்பட்ட கவிதை)**

கடலின் அலைகள் கரையைத் தொட்டுத் தடவிச் சென்று கொண்டிருந்தன. சாதுவான அலைகளுக்கு நடுவே, அமைதியான பாடல் ஒன்றுக்கு ஆடுவது போல இயந்திரப் படகு ஒன்று தள்ளாடிக் கொண்டு நின்றது.

அந்தப் படகினை நோக்கி தலைகளில் பெட்டி படுக்கைகளை சுமந்தபடியே, சிலர் கடலில் இறங்கி நடந்தனர் அந்த மஞ்சட் கதிர் தெறிக்கும் மாலை நேரக் கடல், ஒரு அன்பான தாயைப் போல் அமைதியாகக் கிடந்தது.

# ''இந்தியக்கரை''



**வசந்தன்**

''எனிக் காணும், 50 பேருக்கு மேலே ஏற ஏலாது. நேற்றும் அகதிகளை ஏத்திக்கொண்டு போன ஓண்டு கடலுக்கை தாண்டு போச்சாம்'' படகில் ஆட்களை ஏற்றிக் கொண்டிருந்தவன் சொல்லிக் கொண்டிருந்தான்.

''இவனுக்கு நல்ல சொல்லுகள் வாயிலை வராதே, வெளிக்கிடுகிற நேரத்தில கதைக்கிற கதையைப் பாரன்'' கிழவி ஒருத்தி திட்டத் தொடங்கினாள்.

எல்லோரும் ஏறிய பின்பு, ஒரு அலையின் எத்தலுடனே படகில் தாவி ஏறினான் சுந்தரம். மடித்துக் கட்டியிருந்த சாறத்தை அவிழ்த்து விட்டபடியே, படகின் இயந்திரத்தை மூடி இருந்த பலகையில் இருந்து கொண்டே நிமிர்ந்து பார்த்தான். எதிரில், ப கின் அணியப் பக்கமாக கோகிலா-அவனையே விழிகளைஎடுக்காமல்பார்த்துக் கொண்டிருந்தாள்.

இவளுக்காகத் தான் இன்றைய பயணம். ஏன் இவளுக்காகத் தான் எனது வாழ்வுப் பயணமும் தொடர்கிறது. ஒரு பெருமூச்சுடனே முகத்தை வெளியே திருப்பினான் சுந்தரம்.

பஞ்சநாதர் கடல் தண்ணி தெறிக்கத் தெறிக்க ஓடிவந்து படகில் ஏறினார் அவருடையது தான் அந்தப் படகு. இவ்வளவு நாளும் தொழிலுக்கு போய் வந்த அந்தப் படகு இப்போது இந்தியாவிற்கு அகதிகளை ஏற்றி இறக்குவதற்காக பயன்படுகிறது. இதுதான் அவருடைய இரண்டாவது பயணம்.

எது எப்படியோ, அவருக்கு நல்ல உழைப்பு. நங்கூரத்தை ஒருவன் இழுத்தெடுத்தான். படகின்இயந்திரம் சாதுவாக இயங்கத் தொடங்கியது. படகு மெதுவாக கடலில் ஒரு வட்டம் போட்டுவிட்டு நிமிர்ந்தது

''நீண்ட பயணம் தம்பி நாங்கள் நித்தமும் வாழுற கடல் தாயிற்கு மரியாதை செலுத்தாமல் ஒரு நாளும் வெளிக்கிடுகிறதில்லை. இன்னும்கொஞ்சநேரத்தில் கடல்பயணத்தின் கஸ்டங்களை நீயும் அறியத்தானே போறாய்''

என்றபடியே சுந்தரத்தைப் பார்த்து நெற்றியும் கண்களும் சுருங்கும் படியாக சிரித்தார் பஞ்சநாதர். கடற்கரையும், கரையை அண்டியிருந்த தென்னைகளும், குடிசைகளும் கொஞ்சம் கொஞ்சமாக பின்னுக்கு போயின. தாயகத்தைப் பிரிந்து செல்லும் ஏக்கம் படகிலிருந்தவர்களை சூழ்ந்து கொண்டது. அவர்களின் நினைவுகளை - தெரிந்து கொண்டே - அலைகளின் ஒவ்வொரு உயரத்தையும் தாவித் தாவி அந்தப் படகு நடுக் கடலுக்குள் சென்று கொண்டிருந்தது.

கடலில், காற்றின் இரைச்சல் இதமாக இருந்தது. அணியத்தில் நின்று ஒருவன், கடலின் விழிப்பை கண்களால் அலசியபடி நின்றான். கடற்படைப் படகுகள் ஒன்றும் கண்ணுக்குத் தெரியக்கூடாதென அவன் மனம் சொல்லிக் கொண்டிருந்தது.

சுந்தரம் வானத்தை நிமிர்ந்து பார்த்தான், இன்னும் சில கணங்களில் வானம் இருண்டு விடும். அதன்பின் இருட்டில் ஒருவரையுமே பார்க்க முடியாது. அவன் அவசரமாக கோகிலாவைத் திரும்பிப் பார்த்தான்.

அவள் கரையையும் பார்க்கவில்லை. கடலையும் பார்க்கவில்லை. சுந்தரத்தை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தாள்.

□ □ □

தம்பலகமந்தான் எவ்வளவு அழகான கிராமம். பார்க்கும் இடம் எல்லாம் பரந்து விரிந்த வயல்வெளிகள். இடை இடையே மண் பிட்டிகள்போன்று நிமிர்ந்து நிற்கும்ஊர்மனைகள். உண்மையிலேயே வளமும் அழகும் தம்பலகமத்தில் நிறைந்துபோய்க் கிடந்தது.

அந்த ஊரின் பெரிய மனிதரான பொன்னம்பலத்தாருக்கு இரண்டு பெடியளும் ஒரு மகளும் தான் பிள்ளைகள். மூத்த மகன் சுந்தரம் சிறுவனாக ஓடித்திரிந்த பொழுதே தன் தங்கையின்மகளுக்குத்தான் அவன் என்று சொல்லி விட்டார் பொன்னர். பொன்னம்பலத்தாரின் தங்கைக்கும் அது மகிழ்ச்சிதான் அவளின் மகள் கோகிலாவும் பொன்னம்பலத்தாரின் வீட்டுப் பிள்ளைபோல அங்கேயே நின்று வளர்ந்தாள்.

காலம் உருண்டோடிய போது தம்பலகமமும் உருமாறிப் போனது, தொழில் தேடி வந்த சிங்களவர்கள் படிப்படியாக பெருகினார்கள். அவர்களின் பாதுகாப்பிற்கு அரச படைகளும் சேர்ந்தே வந்தனர். இடம் தேடி வந்த சிங்கள மிருகங்கள் இரை தேடிப் பாய்ந்தன.

தமிழ் நிலங்கள் பறிக்கப்பட்டன. இடை இடையே எழுந்த கலவரங்களால் பல தமிழ் உயிர்களும் இழக்கப்பட்டன.

ஒரு காலை நேரம் கோகிலாவும் சுந்தரத்தின் தங்கையும் வீதியால் வந்து கொண்டிருந்தார்கள். சின்ன வயது தொடக்கம் பார்த்துப் பழகிய வீதி, பெரிதும் மாறியிருந்தது. சிங்களக் கடைகளும், சில வீடுகளும் புதிதாக எழுந்து நின்றன அந்நேரம் - வீதிக்கு குறுக்காக பத்துப் பதினைந்து சிங்கள இளைஞர்கள் வழி மறித்து நின்றனர். வழமையான விசமத்தனங்கள் அன்றும் தொடர்ந்தன.

அன்று மாலை, பொன்னரின் வீட்டில் பெரும் அமளியே நடந்து கொண்டிருந்தது. கோகிலாவும் சுந்தரத்தின் தங்கையும் வீட்டு வாசலில் கண்ணீருடன் இருந்தனர்.

''எங்களால தெருவில நடக்கவும் முடியேல்லை இவங்கட ஆக்கினைக்கு அளவில்லாமல் போச்சுது'' கோகிலா விம்மலுடனே சொல்லிக் கொண்டிருந்தாள்.

வீட்டு விறாந்தையில் பொன்னம்பலத்தார் சத்தமில்லாமல் சாய்ந்திருந்தார் சுந்தரம் வழமையான அமைதியோடு நிலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பொன்னம்பலத்தாரின் இரண்டாவதுமகன் சினந்து கொண்டிருந்தான். ''இவங்களை சும்மா விடக்கூடாது ஏதாவது செய்யத்தான் வேணும்'' சின்னவனின் கோபத்தைக்கண்டு எழுந்து வெளியே வந்தார் பொன்னம்பலத்தார்.

''தம்பி, நீ ஒருவனா நிண்டு கொண்டு அர்த்தமற்ற வீரத்தைப் பேசுறதில பிரயோசனம் இல்லையடா நாங்கள் காலங் காலமா வாழ்ந்த நிலத்தைப் பார், எல்லாம் அவங்களிட்டை இருக்கு இது என்ரை கண்ணுக்கு முன்னால நடந்தது இண்டைக்கு நீ சண்டைக்கு போனா, என்ன நடக்கும்? நாளைக்கு ஊருக்கை வந்து ஊரை அழிப்பாங்கள்'' பொன்னம்பலத்தார் சொல்லிமுடிக்கும் முதலே சின்னவன் சினந்தான்.

''அப்ப, அவன் எதையும் செய்யட்டும் எண்டு பார்த்துக் கொண்டு இருக்கச் சொல்லுறீங்களோ''

''நான் அதைச் சொல்லேல்ல, முதலில் எதிரியைக் கவனி, அவனோடு மோதுகிற பலத்தை வளர்த்துக் கொள்! அவன் ஆயுதத்தோடு நிற்கிறான், நீ வெறும் ஆள். உன்னால ஒண்டும் செய்யேலாது, முதலில் நீ ஆயுதத்தைத் தூக்கடா'' சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்ட திருப்தியோடு, பொன்னம்பலத்தார் மண்வெட்டியைத் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டே வயலைப் பார்க்க நடந்தார்.

மறுநாளே, சின்னவன் எங்கேயோ காணாமல் போனான். நீண்ட நாளின் பின் நிலவு தெறிக்கும் ஒரு இரவில் வந்தான். அப்போது அவனுக்குத் தேவைப்பட்ட ஆயுதம் கையிலிருந்தது.

பொன்னருக்கோ முகத்தில் திருப்தி, பெருமை கலந்த இளநகையுடன் தன் மகனைப் பார்த்தார்.

''என்ர காலத்திலேயே இந்த மண்ணுக்கு வெளிச்சம் வரத்தான் போகுது'' அவரின் மனம் குறுகுறுத்தது. விடிவெள்ளி கிழக்கு வானில் விழுந்து கொண்டிருந்தது. சின்னவன் வேலியைத் தாண்டி இருளில் கலந்தான்.

□ □ □

சிறிது காலம் அமைதியாகக் கிடந்த தேசம் மீண்டும் அதிரத் தொடங்கியது அழிவுகளை விளைவித்தபடியே சிங்களக் காடையரும் இராணுவத்தினரும் தம்பலகமக் கிராமங்களிற்குள் புகுந்தார்கள். தமிழர்களின் வீடுகளும், வயல்களும் எரிந்து கொண்டிருக்

கையிலேயே, மக்கள் அகதிகளாக காடுகளிற்குள் ஓடி ஒளிந்தார்கள்.

பொன்னம்பலத்தாரின் குடும்பமு - காட்டிற்குள் தஞ்சமடைந்திருந்தார்கள். ''எனியும் ஊருக்கை இருக்கேலாது, இருந்தா சாகத்தான் வேணும், எங்காவது போய் முதலில் உயிரைக் காப்பாற்ற வேணும். நாங்கள் இந்தியாவிற்கே போவம்'' என்றாள் பொன்னரின் தங்கச்சி. பக்கத்திலிருந்த உறவு முகங்களும் அவளின் வார்த்தைகளிற்கு தலையை அசைத்தார்கள்

பொன்னம்பலத்தாருக்கு இது சற்றும் பிடிக்கேலை ''நீங்கள் ஊரைவிட்டு ஓடுறது, எனக்குச் சரியாப்படேலை, இப்படியே எல்லாரும் ஓட வெளிக்கிட்டா எங்கட வாழ்விடத்தை நாம் முற்றாக இழந்திடுவம்'' பொன்னர் சொல்லிக் கொண்டே, காட்டிற்குள் கொட்டில் போடுவதற்காக தடி ஒன்றைச் சீவிக் கொண்டிருந்தார்.

''காட்டுக்கை எத்தினை நாளைக்குத் தான் வாழுறது, சாப்பாடு தண்ணி இல்லாம சாகிறதே, நாங்கள் வயசுபோன கட்டைகள் சின்னதுகளை என்றாலும் வாழ விடுங்கோ, நீங்கள் வாறதெண்டால் வாருங்கோ ' பொன்னரின் தங்கை அழுகைக்கிடையே சொல்லி முடித்தாள்.

''நான் வரவில்லை, எனக்கு இந்தக் காடும் - ஊரும் வாழுறதுக்கு வழி விடும். பிறந்தது தொடக்கம் வாழ்ந்த இந்த மண்ணை விட்டு என்னால வர ஏலாது. அதுக்காக அசட்டுத் தனமான துணிச்சலைக்காட்டிஇவங்களிட்ட நான் சாகப்போறதில்லை. ஆனால், ஓடப்போறதும் மில்லை. இங்க வந்துபோற பெடியளுக்காகவாவது இங்க நான் இருக்கத்தான் போறன்'' பொன்னம்பலத்தார் உறுதியாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

□ □ □

நல்ல நிலவு கடற்பரப்பில் பட்டுத் தெறித்துக் கொண்டிருந்தது, வெண் பஞ்சு மேகங்கள் நிலவுக்கு வழிவிட்டு விலகிச் சென்றன.

ஆழக் கடலின் அலையின் சலசலப்பும், படகு இயந்திரத்தின் ஓசையும் அந்த நிலவுபாடும் இரவுக்கு இனந்தெரியாத பயங்கரத்தை பூசிக்கொண்டிருந்தது.

சுந்தரத்தின் மனம் அமைதியில்லாமல் தவித்தது இந்த மண்ணின் விடுதலைக்காகப் போராடும் தம்பி எவ்வளவு உயர்ந்தவன். அவனை விட, போராளிகளுக்காக வாழவிரும்பும் அப்பா, எவ்வளவு உயர்வானவர் ஆனால், நான்......,

நிலவு வெளிச்சத்தில் கோகிலாவின் விழிகளைத் தேடினான் சுந்தரம். நிலவுக்கு அவளின் உருவத்தைக் காட்ட சக்தி இருந்தது. ஆனால் முகத்தின் உணர்ச்சிகளை வெளிக்காட்டும் சக்தி நிலவுக்கு இல்லை.

அணியத்தில் நின்றவன் பலமாகக் கத்தினான்.

''அன்னை கடலிலை ஏதோ மிதந்து வருது''

''கவனமாபாரடா ஆரும் சனத்தின்ரை உடலாக இருக்கும்''

''இல்லை அண்ணை, ஏதோ மிதந்து போகுது'' என்று விட்டு பழையபடி கடல்வெளியை அலசவெளிக்கிட்டான்.

''மனிதர்கள் தாண்டு போனார்கள் அவர்களின் உடமைகள் கரையைத் தேடிபயணம் போகின்றன' என்று பஞ்சநாதர் வேதனையோடு சொன்னார்.

இம்முறை சுந்தரமே கத்தினான்.

''அண்ணை உண்மை யாகவே மனித உடல்கள்'' அவன் வார்த்தைகளை முடிக்க முதலே படகிலிருந் தவர்கள் எல்லோரும் ஒரு பக்கமாக எழுந்தனர் பஞ்ச நாதர் கத்தினார்.

''இருங்கோ, இருங்கோ இப்பிடி கண்டபடி எழும் பினா நாங்களும் கவிழ வேண்டிவரும்'' வண்டி வேகத்தைத் குறைத்துக் கொண்டு அந்த உடல்களு க்கு அருகில் போனது.

''தம்பி, உயிரோடு ஏதும் இருக்கோ என்டு பார். அசையுதே'' பஞ்ச நாதர் கேட்டு முடிக்க முத லே சுந்தரம் வெறுப்புடன் அவரைப் பார்த்தான் பஞ்ச நாதருக்கு அவனது முகத் தைத் தெரியவில்லை தான் ஆனால் அவனின் உணர்வு களை விளங்கிக் கொண் டார்.

''தம்பி, இந்த உடல் களை படகில் எடுத்துப் போடுவதால் ஒரு பிரயோ சனமும் இல்லை. இவர் களுக்காக நாம் அனுதாபப் படலாம். சில துளிகள் கண்ணீரைச் சிந்தலாம் வேற ஒண்டுமே செய்யே லாது'' பஞ்சநாதர் அலை ஒன்றின் பலமான அடிப்பு டன் முகத்தில் பட்ட உப்பு நீரை வெறுப்புடன் துடைத் தெறிந்தார்.

''தமிழனா பிறந்தா, இது தவிர்க்க முடியாது, நிலத்திலையும், கடலிலை யும் சாகத்தான் வேணும், அவன் போற இடமெல் லாம் சாவு அவனைத் துரத் தும், இது மாற வேணும், இந்த நிலை மாற்றப்பட வேணும்'' பஞ்சநாதரின் குரல் தளம்பியது. மனதின் வேதனையை குரல் வெளிக் காட்டி நின்றது.

சுந்தரம் முடிவு தெரி யாத கடல் வெளியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த உடல்களை தாண்டி படகு தொடர்ந்து ஓடியது.

''தமிழராய் பிறந்தா இது தவிர்க்க முடியாதா? இந்த நிலையை ஆர் மாற்று வது? தம்பியை மாதிரி போராளிகளா? அல்லது அப்பாவை மாதிரி போரா ளிகளுக்காகவே வாழ்பவர் களா?'' திரும்பவும் பார்த்தான். அந்த உடல் கள் கடலில் தள்ளாடித், சென்று கொண்டிருந்தன.

சுந்தரத்தின் நெஞ்சிற் குள் புதிதாக ஒன்று தோற் றம் பெற்றது.

''நாங்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து போரா டினால் தான் எங்களுக்கு வாழ்வு'' சுந்தரம் உறுதியு டன் நிமிர்ந்தான்.

இரவு விடியும் நேரம், இந்திய மீன்பிடிப்படகுகள் கடலில் நின்றன. ராமேஸ் வர வெளிச்சம் தெளிவா கத் தெரிந்தது.

''எனிப் பிரச்சனை இல்லை கொஞ்ச நேர ஓட் டம் தான். கரைக்கும் போ யிடலாம்'' என்றான் அணி யத்தில் நின்றவன்.

''நல்ல காலம் கடற் படை மிருகங்களை சந்திக் காமல் வந்திட்டம், இல் லாட்டி இண்டைக்கு கட லிற்குள் மிதந்த சனத்தை மாதிரி அல்லது இந்தக் கடலிற்குள் படகு, படகாக சுட்டுக் கொல்லப்பட்ட அகதிகள் மாதிரி நாங்களும் கடலிற்கு இரையாகி இருப் பம்'' படகிலிருந்து நிம் மதிப் பெருமூச்சு ஒன்று காற்றில் எழுந்து கலந்தது.

பஞ்சநாதர், சுந்தரத் தைப் பார்த்து சொல்லத் தொடங்கினார். ''தம்பி, எனி நான் இந்தத் தொழி லைச் செய்யப் போற தில்லை. எனக்கு ஏதோ நாங்கள் எல்லோரும் நாட் டில் நின்று ஏதோ ஒரு வழியில் போராடினால் தான், எங்களுக்கு ஒரு விடிவு கிடைக்குமாப் போல இருக்குது. எங்கட மக் களை அகதிகளாக இக் கரைக்கு கொண்டு வாறது

ஏதோ மனச் சாட்சிக்கு விரோதமாக கிடக்கிது,'' என்றவாறு அவர் இயந்திரத்தின் வேகத்தைக் குறைத்தார், அந்தப் படகு அவசரமில்லாமல் ஆறுதலாக இந்தியக் கரைக்கு சென்று கொண்டிருந்தது.

நன்றாக விடிந்து விட்டது. ''அண்ணை, இவையளை இறக்கி விட்டு உடன நாங்கள் திரும்ப வேணும். இந்திய காவல்படை கண்டா வள்ளத்தைப் பறிக்கிறாங்களாம்'' என்றான். பஞ்சநாதருடன் உதவிக்கு வந்தவர்களில் ஒருவன்.

''ஓமண்ணை, இரண்டு நாளைக்கு முதல் தான். இவங்களுக்கு பயந்து தூத்துக்குடிக்குப் பக்கத்தில கடலுக்கை இருந்த மண்பிட்டியில சனத்தை இறக்கி விட்டுட்டு வள்ளக்காரன் ஓடிட்டான். அது கடல் பெருகி பொம்பிளைகள் குழந்தைகள் எண்டு பதினேழு பேரை இழுத்துக் கொண்டு போட்டுது'' சொல்லிக் கொண்டே நங்கூரத்தை இழுத்துக் கடலில் போட்டான் அணியத்தில் நின்றவன். படகு மணலில் தட்டியவாறே கடலில் நின்றது.

''நாங்கள் வாறது, தங்களுக்கு பிடிக்கேலை எண்டு இந்திய ஆட்சியாளர்கள் இப்பவே சொல்லுறாங்கள்'' பஞ்சநாதரின் வார்த்தைகளை காதில் வாங்கிக் கொண்டே, எல்லோரும் இறங்கினார்கள்.

சுந்தரம் மட்டும் இறங்காமல் நின்றான். ''அண்ணை திருப்புங்கோ, நானும் வாறன்'' என்று கொண்டே பஞ்சநாதரைப் பார்த்தான்.

''என்ன தம்பி விசர்க்கதை கதைக்கிற, இவ்வளவு கஸ்டப்பட்டு இங்கால வந்திட்டு, இப்பத் திரும்ப வாறன் எண்டு சொன்னா என்ன மாதிரி''

''அண்ணை, இந்தக் கடல் எனக்கு நிறைய பாடம் சொல்லிட்டுது. எங்கட தேசம் இரத்தத்தில் குளிக்கேக்கை, எங்கட மக்கள் நிலத்திலும் கடலிலும் கூட்டம் கூட்டமாக அழிக்கப் படேக்கை, இஞ்சை அகதியா இருக்கிறதை என்ரை மனம் விரும்புதில்லை. அந்த மண்ணில நிண்டு எங்கட விடுதலைக்காக நாங்களும் போராட வேணும் என்பதில் எனக்கு இப்பச் சந்தேகமில்லை. வெளிக்கிடுங்கோ நானும் வாறன்'' சொல்லி விட்டு திரும்பிப் பார்த்தான் சுந்தரம். படகுக்கு அருகில் கடலில் கோகிலா நின்றாள். அவளது தாயாரும் நின்றாள் இன்னும் தெரிந்த உறவு முகங்களெல்லாம் நின்றன.


''அண்ணை இறங்கி வா'' சுந்தரத்தின் தங்கை விம்மினாள். கோகிலாவைப் பார்த்து தாயார் சொன்னாள்.

''நீ சொன்னா கேட்பான் அவனை இறங்கி வரச் சொல்''

''இல்லை அம்மா அவர் போகட்டும். இங்கை இருக்கிறதிலையும் காட்டி அவர் அப்படிச் செய்யிறது தான் நல்லது. எங்கள் தேசத்தின் விடிவிற்காக அவர் போராடட்டும்.

அவரிடமிருந்து நான் என்னத்தை எதிர்பார்த்திருப்பேன் என்பது அவருக்குத் தெரியும்'' கோகிலா சொல்லிக் கொண்டிருந்தாள். சுற்றி நின்றவர்கள் எல்லாம் திகைத்து நின்றார்கள். கடல் மட்டும் சாதுவான சலசலப்போடு அவளின் வார்த்தைகளிற்கு மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டிருந்தது.

□□



# -எங்கள் தாயவள் கொடியிது.


- புதுவை இரத்தினதுரை -


ஏறுது பார் கொடி ஏறுது பார்
ஏறுது பார் கொடி ஏறுது பார் — இங்கே
ஏறுது பார் கொடி ஏறுது பார் — தமிழ்
ஈழத்தின் வேதனை தீர்த்த கொடி — எட்டுத்
திக்கிலும் மானத்தை சேர்த்த கொடி
காலத்தை வென்றுமே நின்ற கொடி - புலி
காட்டிய பாதையில் சென்ற கொடி

(ஏறுது பார்)

செக்கர் நிறத்திலே ... வேங்கை நடுவிலே
சீறிடும் கொடியிது — தமிழ்
மக்களைக் காத்தநம் மானமாவீரரை
வாழ்த்திடும் கொடி இது — புலி
வீரத்தின் கொடியிது — மா
வீரரின் கொடியிது

(ஏறுது பார்)





எத்தனை எத்தனை வேங்கைகள் ரத்தத்தில்
ஏறிய கொடியிது பெரும்
சத்திய வேள்வியில் செத்தவர் மீதினில்
சாத்திய கொடியிது தமிழ்
ஈழத்தின் கொடியிது — புலி
ஏந்திய கொடியிது

(ஏறுது பார்)

சாதிகள் சண்டைகள் சாய்த்து விழுத்திய
சாதனைக் கொடியிது – சங்கு
ஊதி முழங்கிட ஊர்மனையாவிலும்
உலவிய கொடியிது — சம
தர்மத்தின் கொடியிது — எங்கள்
தாயவள் கொடியிது

(ஏறுது பார்)

ஆயிரம் ஆயிரம் பேரென வேங்கைகள்
ஆக்கிய கொடியிது -- பிர
பாகரன் என்றிடும் காவிய நாயகன்
போற்றிடும் கொடியிது தமிழ்
தேசத்தின் கொடியிது எங்கள்
தேசியக் கொடியிது.

(ஏறுது பார்)

## "இனியொருவிதி"



# "தமிழரின் வாழ்வியல் துயரத்தின் ஒரு குறியீடு"

ஏ. ஜே. கனகரட்னா

## 'நிதர்சனம் தயாரிப்பு'

திரைப்படம் என்பது அடிப்படையில் கட்புலன் சார்ந்த ஊடகம் என்பது யாவருக்கும் தெரிந்த ஒன்றே. இப்படத்தின் நெறியளார் இந்த உண்மையை நன்குணர்ந்து உள்வாங்கி, திரைப்படத்திற்கேயுரிய ''கட்புல மொழியை'' மிக நேர்த்தியாகக் கையாள்கிறார். தேவைப்படும் கட்டங்களில் மட்டுமே இயல்பான, பேச்சு மொழிப்பாங்கில் அமைந்த உரையாடல்கள் வருகின்றன. ஒலிகள் எழுகின்றன.

வெவ்வேறு ஊடகங்களைச் சார்ந்த உருவங்களை ஒப்பிடுவதில் சிக்கல்கள் இல்லாமலில்லை. ஆனால் அவ்வாறு ஒப்பிடும் போது ஊடகத்தைக் கடந்த சில ஒற்றுமைகள் புலப்படத்தான் செய்யும். இத்தகைய ஓர் குறும்படத்தைச் சிறிய உணர்ச்சிப்பாடலுக்கு (*Short Lyric*) ஒப்பிடலாம். முன்னையது கட்புலமொழியைச் சார்ந்தும், பின்னையது செவிப்புல மொழியைச் சார்ந்தும் இருப்பினும், இரண்டு வடிவங்களிலும் ஓர் இறுக்கத்தை, உணர்ச்சிகளைத் தட்டியெழுப்புவதில் ஓர் கச்சிதத்தைக் காணலாம். நல்லதொரு உணர்ச்சிப் பாடலை வாசிக்கும் போது ஏற்படும் தாக்கங்களை, இக்குறும்படம் என்மனதில் ஏற்படுத்துகிறது. தமிழ் மக்களின், குறிப்பாக திருமலை மட்டக்களப்பு வாழ் தமிழ் மக்களின் வாழ்வியல் துயரத்தின் ஒரு (*Existential Anguish*) குறியீடாக இப்படம் விளங்குகிறது.

ஓர் கலைப்படைப்பிற்கும் வாசகன் அல்லது பார்வையாளருக்குமிடையே நிகழும் இடைவினை (*interaction*) ஓர் வகை உரையாடல் மூலமே கலைப்படைப்பு உண்மையில் நிறைவுபெறுகின்றது. இவ்வாறு நோக்குகையில், குறும்படத்தின் காட்சிப் பரப்பெல்லையும், நிகழ்வெல்லையும் முழுநீளப் படத்தின் காட்சிப்பரப்பெல்லையையும், நிகழ்வெல்லையையும் விட குறுகியிருக்கும் போதிலும் குறும்படத்தின் படிமங்களைக்கொண்டு பார்வையாளன் தனது மனத்திரையில் அவற்றினைப் பூரணப்படுத்துகிறான். மிகவிரிவான கூறுகளும் அமைந்த விவரணப்படம் போல் குறும்படம் அமைந்திருக்கவேண்டும். என எதிர்

பார்ப்பது உண்மையில் எமது பார்வையாளரின், சுவைஞரின் கற்பனைவளத்தை இகழ்வதாகவேயிருக்கும்.

எடுத்துக்கொண்ட பொருளை புறச்சூழலின் தாக்கம் எவ்வாறு ஓர் இளைஞனைப் பாதித்தது. அத்தாக்கத்தால் உந்தப்பட்ட அவன் ஆயுதப் போராட்டத்துடன் தன்னை இணைத்துக்கொள்ளத் தீர்மானிக்கிறான், என்பதை இக்குறும்படம் மிக எளிமையாகவும், முனைப்பாகவும் கையாள்கின்றது. முஷ்டிகள் உயர்த்தப்படவில்லை, கோசங்கள் கர்ஜிக்கப்படவில்லை, வீரவசனங்கள் முழங்கவில்லை, பச்சைப் பிரச்சாரத்தின் வாடை எதுவும் வீசவில்லை. ஊடகமே செய்தி (*the medium is the message*) என்பதை நெறியாளன் உணர்ந்திருப்பதால், இந்தக் கோளாறுகள் எதுவும் நிகழவில்லை.

தனித்துவம் வாய்ந்த தமிழ்த்திரைப்பட பாரம்பரியம் ஒன்றை ஈழத்திலேதான் உருவாக்கிக் கட்டியெழுப்பலாம் என்று எம்மை எண்ணத் தூண்டுகிறது. ''இனியொரு விதி'' இன்றைய யதார்த்தத்தில், குறிப்பாக அரசியல் நிலைமையில் எமது கலைஞர்கள் வேரூன்றியிருந்தால், படாடோப உத்திகள் எதுவுமின்றியே அவர்களது படைப்புகள் கலாரீதியாக வெற்றி ஈட்டும். பாரதியார் கூறியது போல்'' உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும். வாக்கில் மட்டுமல்ல திரைப்படக்கருவியிலும் தான்.

இறுதியாக ஒன்றைக் கூற விரும்புகின்றேன். வெறும் முகப் புகழ்ச்சிக்காக வல்ல, வெளிநாடுகளில் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாக்களுக்கு இக்குறும்படம் அனுப்பப்பட வேண்டும். அதற்கு வேண்டிய தரத்தினை இனியொரு விதி எய்தியுள்ளதாக நான் கருதுகிறேன். பரிசுகளைப் பெறத் தவறினாலும், வெளியுலகு செவ்வனே அறியாதிருக்கும் எமது யதார்த்தத்தை கலாரீதியாக உலகிற்கு அது உணர்த்தும். அத்துடன் கலைப்படைப்பு என்ற வகையில், இனியொரு விதி தனி ஈழமுத்திரையைப் பதிக்கும் என்பதே என் கணிப்பீடு.

தன்னடக்கமே இக்குறும் படத்தின் பலம். இத்தன்னடக்கம் பெரும்பாலான தமிழ் வணிகத் திரைப்படங்களுக்கு அன்னியமானதே. □□

**26 - 09 - 1991**

**நான்காம் ஆண்டு நினைவுதினம்**

**தியாகி திலீபன் நினைவில் நனைவோம்......**

## உங்களை நாடிவரும் வெளிச்சம்.

தமிழர்களின் அரசியல் நிலை எவ்வாறோ அவ்வாறுதான், தமிழர்களின் கலை. பண்பாடு, சமுதாய நிலை என்பவற்றிலும் இருள்சூழ்ந்து தாழ்வுற்ற நிலை˘ய இருந்து வருகிறது. அந்த இருளை நீக்கி ஒளியேற்றுவதற்காகவே ''வெளிச்சம்'' உங்களை நாடி வருகிறது.

நாகரீக வளர்ச்சியும், பண்பாட்டில் மேம்பாடும் கொண்டு செழுமையான ஒளி வீசும் வாழ்க்கையை மேற்கொண்டு வந்த தமிழன், நாடோடிகளாக வந்த மாற்றானிடம் அடிமைப்பட்டு ஒளியிழந்து இருள் சூழ்ந்த வாழ்க்கைக்காளானான்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அடிமைப்பட்ட தமிழன் மாறி மாறி வேற்று இனத்தாரின் அடிமைத் தளையில் அகப்பட்டு இருள் சூழ்ந்த வாழ்கையையே மேற்கொண்டு வந்தான்.

அண்மைக் காலத்தில் தன் அடிமைத் தளையை அறுத்து அன்னைத் தமிழை அரியணையில் ஏற்ற வேண்டுமென்று ஏற்றமுறு எழுச்சி கொண்டு கிளர்ந்தெழுந்துள்ளது எம்மினம். தமிழீழ மண் மீட்பிற்கான பெரும் போர் ஒரு புறம் நடந்து கொண்டிருக்கும் போதே, இருண்டு கிடக்கும் தமிழனின் கலை, பண்பாடு நாகரீகம், அறிவியல், இலக்கியம், சமுதாயநிலை போன்றவற்றிற்கு ஒளியேற்றும் வகையில் எமது கலை பண்பாட்டுக்கழகம் வெளிச்சத்தை வெளிக்கொணர்கிறது.

உங்கள் கைகளில் தவழும் இந்த ''வெளிச்சம்' திங்கள் இதழாக தொடர்ந்து பொலிவுடன் வெளிவரவிருக்கிறது இருண்டு தாழ்வுற்றுக் கிடக்கும் தமிழரை அனைத்துத் துறைகளிலும் ஏற்றமுற வைப்பதையே நோக்காகக் கொண்டுவரும் ''வெளிச்சம்'' திங்கள் இதழ் மிகுந்த இடர்ப்பாடுகளை கடந்து வெளிவர வேண்டிவிருக்கிறது.

வெளிச்சம்

புரட்டாதி - ஐப்பசி 1991
இதழ் - 1

மின்தடை, எரிபொருள் தட்டுப்பாடு, பத்திரிகைத் தாள் இன்மை, போன்ற பல்வேறு இடர்ப்பாடுகளுக் கிடையில் வணிக நோக்கின்றி சிரமங்களுடன் வெளி வரும் வெளிச்சத்தை உரிய வகையில் கைகொடுத்து உதவ வேண்டியது தமிழ் மக்கள் அனைவரினது கடமையாகும்.

திங்கள் இதழ்கள், முத்திங்கள் இதழ்கள், வார இதழ்கள் என பல்வேறு நோக்கங்களைக் கொண்ட பல்வேறு இதழ்கள் இதுவரை ஈழத்தில் வெளிவந்திருக்கின்றன. தமிழை, தமிழனை, தமிழினத்தை ஏற்றமுறச் செய்யும் உயரிய, நேரிய நோக்கோடு வெளிவரும் ''வெளிச்சம்'' அந்த நோக்கங்களோடு உங்களிடமிருந்து வரும் இலக்கிய ஆராய்ச்சி, ஆய்வுக் கட்டுரைகள், நகைச் சுவைத் துணுக்குகள், பாடல்கள் போன்ற ஆக்கங்களுக்கு களமமைக்கிறது. இதுவரை உங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தக் களமின்றித் தவித்த படைப்பாளர்கள் வெளிச்சம் தரும் அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்!

இழந்துவிட்ட தமிழீழ மண்ணை மீட்பதற்கான போராட்டத்துக்கும், வரலாறு, கலை பண்பாடு, அறிவியல், அரசியல், தொழில், பொருளியல் போன்றவற்றை ஏற்றமுற வைத்து ஏற்றத்தாழ்வற்ற சமுதாய அமைப்பைத் தோற்றுவிப்பதற்கான போராட்டங்களுக்கும் ஊக்கம் அளிக்கும் வகையிலான ஆக்கங்களை (கதைகள், கட்டுரைகள், கவிதைகள், துணுக்குகள் போன்ற எந்த வடிவத்திலும்) வெளிச்சம் உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறது போராட்ட இலக்கியங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

அத்துடன், எம்மிடையே இடையில் வந்து புகுந்த சமுதாய அழுக்குகளான தீண்டாமை, பெண் ஒடுக்குமுறை, மூடப்பழக்க வழக்கங்கள் போன்றவற்றைக் களையும் வகையிலான எண்ணங்களையும் கருத்துக்களையும் ''வெளிச்சம்'' வெளிப்படுத்தும்.

அதுமட்டுமன்றி, வேற்றுமொழிச் சொற்களின் ஊடுருவல்கள் திணிப்புகளினால் ஊறுபட்டும் அறிவியற் துறையில் வளர்ச்சியற்ற நிலையில் ஆற்றல் குன்றியிருக்கும் தமிழ் மொழியைத் தூய்மைப்படுத்தி செழுமைப்படுத்தும் பணியிலும் வெளிச்சம் நாட்டம் கொண்டிருக்கிறது. அதற்கான நோக்கங்களோடு வரும் ஆக்கங்களுக்கு ''வெளிச்சம்'' களம் அமைக்கும்.

தேனினும் இனிய எமது மொழியை, இனத்தை நிலத்தை, கலை பண்பாட்டு இலக்கியங்களின் ஏற்றத்தையே நோக்காகக் கொண்டு வெளிவரும் வெளிச்சத்தை தமிழீழ மக்கள் விரும்பி வரவேற்பார்கள் என்பது திண்ணம். □

# கைப்பிடி மண்ணில், ஓர் உலகு,

சு. வில்வரெத்தினம்.



மண் விளையாடிக் கொண்டிருந்த எனது மகன்
ஓடி வந்தென் கையைப் பிடித்து விரித்து
மண்ணில் ஒருபிடி அள்ளி வைத்து
ஓர் புன்னகையின் பூவெறிந்து போனான்.

ஈரங் குழைந்த மண் சில்லிடச் சிலிர்த்த கை
இன்னும் விரிந்தபடியே இருக்க
மலர்ந்திருந்த கைப்பிடி மண்ணில்
ஓர் உலகே விரிந்தது.
செட்டை கட்டிப் பறந்த வென்
சிறுவம் அதில் நடந்தது.

குட்டி ராஜாங்கம் எம் முன்றலிலே
நான் கொடிகட்டி
குரலோச்சி அரசாண்ட பீடும் பெருமையும்,
என் முந்தையோரின்
கூடியிருப்பும் குதூகலிப்பும்,
நல்லிரத்தம் சுவறிய நாகரிகத்து வாழ்வும்
கால் கொண்டு நடந்தன கைப்பிடி மண்ணிலே

இன்றோ எம் கண்முன்னே
எல்லாம் சிதற இருந்த நிலம் குழிபெயர
அந்தரத்தில் தொங்கும் அவலங்கள் எமதாக
தொண்டைக் குழியின் தொடுமுடிச்சிற் போய்
இறுகி நிற்கும் வாழ்வும் ஒரு கேடா?
கண நினைவின் நெகிழ்விலே
கையிலிருந்த பிடிமண் வழுவிவிழும்.

'கைதவறிப்போமா எல்லாம்?'
கவலையுறும் என் பார்வை
மண் விளையாடும் எனது மகன் மீது கனிகையிலே
என் விழிசள் மீண்டும் சிலிர்க்கும்

புதிது தளிரீன்ற மாவின் கீழ்
காதலொடு மண்ணைக் குழைத்து
கலை செய்த வாழ்விற்கோர்

கோயில் எடுத்துக் கும்பிடுகள் போட்டு
குனிந்து ஓர் பிடி மண்ணள்ளி
நெற்றியிலே நீறாய்ப் பூசி நிமிர்ந்த வென்

நேசமகன்
தேவாரத்திற் சில பதங்கள் தெளித்நான்

ஈரங் குழைய நின்றேன் நான்
காலம் அவனுடைக் கைபார்த்து நிற்பதென.

தமிழீழ உற்பத்திகள்,
யாவும்
ஒரே இடத்தில்,
பெற்றுக்கொள்ள,
வாருங்கள்.

உதயம் பல்பொருள் அங்காடி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.